Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி-03 | 18-07-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -151




## மட்டு. கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் புலிகளுடன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் ஆகியோரை தமிழீழ விடுதலைப்புலிகளின பிரதிநிதிகள் கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் மேற்படி சந்திப்பு ஆரம்பமாகியது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் சார்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,மட்டு -அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் றமேஸ், அரசியல்துறைத்துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்,மட்டு -அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சிறான் திட்டப்பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், விடுதலைப்புலிகளின் பொருளாதார ஆலோசகர் மகேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் சார்பாக மட்டக்களப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராசசிங்கம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் என 20 வரையானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,ச)



# இ. த.அதிகாரசபை அடிப்படையிலான பேச்சுக்கு ஜே.வி.பி ஒருபோதும் இணங்காது

## ஜே.வி.பி தலைவர் சோமவன்ச தெரிவிப்பு



**தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை. அதற்குத் தமது கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கிறது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பாக தமது கட்சி தெளிவான நிலையில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மல்வத்த திப்பதிவாவே விகாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதென்பது இறுதித் தீர்மானத்துடன் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தையாக அமையாது என்றார் பேச்சுவார்த்தையின் அடிப்படை அதுவாயின

(12ஆம் பக்கம் பார்க்க)

-யாழ்.நீதிமன்றக் கட்டடத்திற்கு-

## நாட்டப்பட்ட அடிக்கல் நல்லூர் ஆலய பின் வீதியில்

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கென சென்ற புதன் சிறிலங்கா பிரதம நீதியரசரால் நாட்டி வைக்கப்பட்ட அடிக்கல் இனந்தெரியாதோரால் கிளறி எடுக்கப்பட்டு நல்லூர் பின் வீதியில் போடப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் பிரதம நீதியரசர் சரத் என்சில்வா சென்ற புதன் விமானம் மூலம் பலாலி வந்து வாகனத்தில் யாழ்.மேல் நீதிமன்றத்திற்கு வந்தபோது அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து பிரதம நீதியரசர் காலை 10.45 மணிக்கு புதிய நீதிமன்றக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்துப் பெயர்ப் பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இவ்வாறு நாட்டப்பெற்ற கல்லே தற்போது கிளறியெடுக்கப்பட்டு நல்லூர் ஆலயப் பின்புறத்தில் இடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

'இக்கல்லை நாட்டியவரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

- பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு -

## இந்திய அரசின் ஒத்துழைப்பை சிறிலங்கா அரசு பெறமுயற்சி

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது மற்றும் அரசியல் நிலைப்பாட்டுக்கு ஆதரவைத் தேடுவது தொடர்பாக இந்தியாவின் ஒத்துழைப்பை சிறிலங்கா அரசு நாடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதன் ஒரு கட்டமாகவே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று இந்தியாவுக்கு இரவு 7.00மணிக்குப் புறப்பட்டுள்ளார். இவருடன் விவசாயத்துறை அமைச்சர் அனுராதிசாநாயக்கவும் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளேயும் பயணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் செல்லும் இக்குழுவினர் இன்று காங்கிரஸ்கட்சியின் தலைவி சோனியா காந்தியை சந்திக்கவுள்ளனர். இந்தியப் பிரதமர் மற்றும் இந்திய உயர்அரசியல் தலைவர்களையும் இவர்கள் நாளை சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் என தகவல்கள் தெரிவிக் (12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அடுத்த வாரம் சிறிலங்காவிற்கு விஜயம்

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேஷன் அடுத்தவாரம் சிறிலங்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள் குறித்து கலந்துரையாடுவதற்கே இவ்விஜயம் மேற்கொள்ளப்படுவதாக கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது. இவ்விஜயத்தின்போது தற்போது கடைப்பிடிக்கப்படும் யுத்த நிறுத்தத்தைத் தொடரவேண்டிய அவசியம் குறித்தும் விதார் ஹெல்கேஷன் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## முல்லைப் பெருந்தள வெற்றிவிழா இன்று முல்லை நகரில் ஏற்பாடு

முல்லைப் பெருந்தளம் விடுதலைப்புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட ஓயாத அலைகள் 01 எட்டாம் ஆண்டு நிறைவு விழா முல்லை நகரில் இன்று கோலாகலமாக நடைபெற உள்ளது.


இன்று பிற்பகல் 4.30மணிக்கு முல்லை. நகரப்பகுதியில் அமைந்துள்ள பெருந்திணைக்கள சந்தியில் இருந்து தமிழர்களின் பாரம்பரிய கலைவடிவங்களான கரகம்,காவடி,கும்மி, சிலம்பு, கோலாட்டம்,குதிரையாட்டம், குடம்ஊதுதல் என்பனவற்றுடன் நாதஸ்வர வாத்தியம், பறை, உடுக்கு போன்ற இசைக்கருவிகளின் வாத்தியம் முழங்க முல்லை.பொது விளையாட்டு மைதானத்தை மக்கள் ஊர்வலமாக வந்தடைவர். இதனைத் தொடர்ந்து தேசியக்கொடி, பொதுச்சுடர் ஏற்றலுடன் மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகும். மேடை நிகழ்வுகளில் பண்டார வன்னியன் நாடகம், (12ஆம் பக்கம் பார்க்க)

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை

## புலிகளிடம் ஒப்படைக்க வலியுறுத்தி அமெ.தூதரக அரசியலதிகாரிக்கு மகஜர்

தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை ஒப்படைக்குமாறு சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து அமெரிக்கத் தூதரக அரசியல் அதி காரி திருமதி கொடி-சி- டெய்ல ருக்கு யாழ்மாவட்டத்தின் பல்வேறு அமைப்புக்களும் மகஜர்களைக் கையளித்துள்ளன.

இவ்வாறு ஒப்படைப்பதன் மூலமே ஒரு நிரந்தர சமாதானத்தை எட்ட முடியும் எனவும் அவை வலியுறுத்தி இம் மகஜர்களைக் கையளித்துள்ளன. யாழ்.மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் யாழ்.மாவட்ட சனசமூக நிலை யங்களின் சம்மேளனம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை , வடபிராந் திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம், யாழ் மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம்,யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் உட்பட பல்வேறு அமைப்புக்கள் [illegible]


தாயக மண் மீட்பில்
ஓயாத அலை-01
எட்டாமாண்டு நினைவில்
தொட்டு நிற்கின்றோம்
அலை ஒன்று குதிரையில் ஆடிவந்தான் எந்தலைவன்
மலை போன்று எதிர் கோட்டை மடிந்தது அன்று
விலை கொடுத்தோம் மறவர்களை கலை வளர்த்தோம் -மீண்டும்
தலைவன் வீரம் சொல்லி தமிழ் வளர்ப்போமென்றும்
சிங்கள வெறிகண்டு அங்கனமே அலையாய் எழுந்த
எங்களின் தலைவனின் புகழ் வங்கம் எங்கும் பரவுகிறது
பங்கு செய்த மாவீரரே! படைதொடுத்த தளபதிகாள்!
உங்கள் தியாகத்தை உணர்வுடன் பூசிப்போம்.
மக்கள்,
தேசிய எழுச்சிப்பேரவை,
முல்லைத்தீவு.
(சி-10029)

# ஈராக்கைப் பார்க்கிலும் வடகொரியாவே பெரும் அச்சுறுத்தலைத் தரும் நாடாகவுள்ளது

## -அமெரிக்க முன்னாள் சனாதிபதி கிளின்டன்

(வோஷிங்டன்)

**ஈராக்கிலும் பார்க்க வடகொரியாவே பெரும் அச்சுறுத்தலைத் தரும் நாடாக இருக்கிறது என்று முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.**

ஆனால் அமெரிக்கா மேலும் ஒரு நாட்டின் மீது யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டாது என்றே தான் கருதுவதாகக் கிளின்டன் கூறியுள்ளார்.

ஒல்லாந்துப் பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டியளித்த கிளின்டன் ஈராக்கில் அமெரிக்கா எதிர்நோக்கும் பிரச்சினைகள் வடகொரியா, ஈரான் போன்ற இன்னுமொரு நாட்டின் மீது யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டாது என்று தெரிவித்தார்.

வடகொரியா அனேகமாக பத்துஇலட்சம் பேரைக்கொண்ட இராணுவத்தை வைத்துள்ளது. அவர்களிடம் சக்தி வாய்ந்த ரொக்கெட்டுக்களும் இருக்கின்றன.

அமெரிக்கா வடகொரியா மீது முன்னோடித் தாக்குதல் ஒன்றை ஆரம்பிக்குமானால் வடகொரியா, தென்கொரியா மீது தாக்குதல் நடத்த வழிவகுப்பதாக அமைந்து விடும் என்று கிளின்டன் மேலும் தெரிவித்துள்ளார்.




ஈராக்கில் உள்ள பிலிப்பைன்ஸ் துருப்பினரின் முதல் 10பேர்கொண்ட தொகுதி, பிலிப்பைன்ஸ் பிணைக்கைதியின் கொலை அச்சுறுத்தலையடுத்து திருப்பியழைக்கப்படவுள்ள நிலையில் மணிலாவில் போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள்

# அசாம்,பீகாரில் வெள்ளப்பெருக்கு 60 பேர் இதுவரையில் உயிரிழப்பு

அசாம் மாநிலத்தில் வெள்ள நிலைமை சீராகும் அதேவேளை பீகாரில் மோசமடைந்து வருகின்றது.

அசாமில் பிரமபுத்திராவில் உள்ள நதிகளில் நீர் அதிகரிப்பு குறைந்துள்ளது. ஆனால் ஐந்து மாவட்டங்களில் வெள்ள நிலைமை மோசமடைந்தே காணப்படுகின்றது.

இதேபோல் பீகார்,நாகலாந்து மாநிலங்களிலும் வெள்ள நிலை மோசமடைந்துள்ளது. பீகாரில் நேற்று முன்தினம் மட்டும் ஆறுபேர் மரணமடைந்துள்ளனர். பீகாரில் மட்டும் வெள்ளத்தினால் இதுவரை 60 பேர் மரணமடைந்துள்ளனர்.

அருணாச்சலப் பிரதேசத்தில் ஜிராத் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஒருவர் வெள்ளத்தில் மூழ்கிப்போயுள்ளார் இதனால் இதுவரை இம் மாநிலத்தில் இறந்தவர்கள் ஆறாக உயர்ந்துள்ளனர்.

# சட்டத்துறை அமைச்சரை குறிவைத்து தற்கொலைத் தாக்குதல் பாக்தாத்தில் 10 பேர் பலி; பலர் படுகாயம்

ஈராக்கில் நேற்று தற்கொலைப் படை நடத்திய கார்க்குண்டு வெடிப்பில் 10பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாக்தாத்தில் ஈராக்கிய அரச வளாகத்திற்கு வெளியே தற்கொடைப் படைத்தீவிரவாதிகளின் கார்க்குண்டு வெடித்துள்ளது.

தீவிரவாதிகள் மெசூல் மாகாண ஆளுனரையும் இரண்டு மெய்ப் பாதுகாப்பினரையும் சுட்டுக் கொன்றுள்ளனர்.

ஆனால் ஈராக்கின் சட்டத்துறை அமைச்சரைக் குறி வைத்தே கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் சட்டஅமைச்சர் மாலிக் லோகன் அல்ஹசன் குண்டுவெடிப்பில் சிக்கிக் கொள்ளாமல் வேகமாக அவரது கார் சென்று விட்டதாகவும் கூறப்படுகின்றது. ஈராக்கில் அமெரிக்கக் கூட்டணிப்படைகள் வெளியேற வேண்டு மென்று கூட்டணிப் படைகள் மீதும், அந்நாட்டவர்களையும் கடத்திக் கொலை செய்துவரும் சதாம் ஹுசைன் ஆதரவுத் தீவிரவாதிகள் தற்போது சதாம் ஹுசைனுக்கு எதிராக வாதாடும் சட்ட அமைச்சரையும் வழக்கறிஞர்களையும் குறி வைத்துத் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

## பாதுகாப்பு அதிகாரிகள் கடத்தப்பட்டதன் எதிரொலி பலஸ்தீன உளவுத்துறைத் தலைவர்கள் இருவர் இராஜினாமா

பலஸ்தீன உளவுத்துறையின் இரண்டு தலைவர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.அமீன், ஹந்தி ஆகிய இரு உளவுத்துறைத் தலைவர்களும் தமது பதவி விலகல் கடிதங்களை பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்திடம் கையளித்துள்ளனர். பலஸ்தீனப் பாதுகாப்பு அதிகாரிகள் சிலரும், பிரான்ஸ் நாட்டவர்கள் நான்கு பேரும் அடுத்தடுத்துத் தொடர்ச்சியாகக் கடத்தப்பட்டதையடுத்து இவர்கள் தமது உளவுத்துறைத் தலைவர் பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நான்கு பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகப் பலஸ்தீன அதிகாரிகள் கூறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கலிபோர்ணியா – லொஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை அணைப்பதில் போராடிக் களைப்படைந்து ஓய்வெடுக்கும் தீயணைப்புப் படைவீரர்கள். கடந்த 12ஆம் திகதியில் இருந்து எரிந்துகொண்டிருக்கும் இத்தீயினால் 10,000 ஏக்கர் காடு அழிந்ததுடன் நூற்றுக்கணக்கானவர்கள் வீடிழந்துள்ளனர்.

# பயங்கரவாதத் தாக்குதலை எவ்வாறு தடுக்கலாம் அமெரிக்க உளவுத்துறை தீவிர பிரயத்தனம்

அமெரிக்காவில் இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் சனாதிபதி தேர்தலின் போது பயங்கரவாதிகள் தாக்குதலொன்றை நடத்தினால் எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முகமாக சமஷ்டி, புலனாய்வுப் பணியகங்களை அமைத்துள்ளது.

வோஷிங்டனிலும் மற்றும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அமைத்து முஸ்லிம்கள் மற்றும் அரபு, அமெரிக்கர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றது.

வோஷிங்டன் போஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள இந்த செய்தியில் சமூகத் தலைவர்கள் மாணவர்கள், வர்த்தகர்கள் போன்றோர் இது சம்பந்தமான யோசனைகளை புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்க முன்வந்துள்ளார்களென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் அடுத்த வாரங்களில் ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலையடுத்து புலனாய்வுப் பிரிவினர் பயங்கரவாதத் தாக்குதலொன்றைத் தடுப்பதில் அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்தவர்களைச் சந்தித்துப் பேசுவதில் கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

# கும்பகோணம் பாடசாலை தீ விபத்து இறந்தவர்களின் தொகை 90 ஆக உயர்வு

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதமெழுத வேண்டுமென்று பிரதமரை தாம் கேட்டுக் கொள்ளப் போவதாக மத்திய தகவல் தொடர்பு மற்றும் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் தயாநிதிமாறன் நேற்றுக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கும்பகோணத்தனியார் பாடசாலையில் மின் கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தைப் பார்வையிட பிரதமரின் சார்பில் சென்ற தயாநிதி மாறன் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் தீவிபத்தில் பலியான பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கை 90 ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




ஈரானில் கொலை செய்யப்பட்ட கனேடியப் பெண்மணி ராகஸ்மியின் கொலையைக் கண்டித்து ஒட்டாவாவில் உள்ள ஈரானிய தூதரகத்திற்கு வெளியே இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில்தனது தாயின் ஓவியத்துடன் மகனான ஸ்டீபன் ஹாஸமி.

## -வை.கோ.உள்ளிட்ட 8 பேர் மீதான-

# பொடோ வழக்கு விசாரணை மீதான தடையை உச்ச நீதிமன்றம் நீடித்தது

ம.திமு.க. பொதுச் செயலர் வை.கோ உள்ளிட்ட எட்டுப்பேரின் மீதான பொடோ வழக்கில் மத்திய பொடோ வட்ட மறு ஆராய்வுக் குழு "இவர்கள் மீது பொடோ சட்டத்தைப் பயன்படுத்தக் காரணங்கள் இல்லை" என்று கூறிவிட்டது.

இதனால் வை.கோ உள்ளிட்ட எட்டுப்பேர் மீதான வழக்கு விசாரணைகள் மீதான தடையை உச்ச நீதிமன்றம் நீடித்துள்ளது.

தமிழக அரசு பொடோ சட்டத்தை தமக்கெதிராகப் பயன்படுத்தியிருக்கக் கூடாது என்று பொடோ மறு ஆய்வுக் குழு கூறியுள்ள போதும் விசாரணை நீதிமன்றத்திலுள்ள வழக்கை தமிழக அரசு விலக்கிக் கொள்ளவில்லை என்று வை.கோவும் ஏனைய ம.தி.மு.க. வாளரும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த போதிலும் இதுவரை தமிழக அரசு இவர்கள் மீதான வழக்கை திரும்பப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கவும் பத்துஇலட்சம் பேர்வரை இடம் பெயரவும் காரணமான கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் படகொன்றில் இருந்து வெள்ளத்தினுள் பாயும் இளைஞர்கள் சிலர்.

# சிறுவர்களை விற்பனை செய்து வந்த தமிழகப்பெண் பொலிசாரிடம் பிடிபட்டார்.

தமிழ் நாட்டிலிருந்து சிறுவர்களைக்கடத்திச் சென்று கேரளாவில் விற்பனை செய்து வந்த பெண்ணொருவரை தமிழகப்பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

தமிழகத்திலிருந்து இரண்டு சிறுவர்களைக் கடத்திச் சென்ற பெண் கேரளாவுக்கு புகையிரதம் மூலம் செல்ல இருந்த வேளை பொலிசார் இவரைக் கைது செய்துள்ளனர்.

# எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்கானோர் அதனை மறைப்பது மோசமான விளைவை ஏற்படுத்தும்

*–வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்*

(செட்டிகுளம்)

**இன்று சமூகத்தில் பலர் எயிட்ஸ் அல்லது ஏச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகி அவர்களுக்குத் தெரியாமலே நடமாடிவருவதாகவும் இதன் விளைவு மிகவும் மோசமானதாக இருக்கும் என்று வவுனியா மாவட்ட பிரதிமாகாண சுகாரதாரச்சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண்ஒருவர் யாழ். மாவட்டத்தில் இருந்தபோது அவருடன் பலரும் தொடர்பு வைத்திருந்தனர். அவர் அங்கு மிகவும் அறியப்பட்ட விலை மாதுவாக இருந்துள்ளார் தற்போது அந்தப் பெண் இறந்து விட்டார். இங்கு பெரும்பிரச்சினை ஒன்று தோற்றுவித்துள்ளது. அந்தப் பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்த பெருமபாலானவர்களுக்கு ஏச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டு இருக்க வாய்ப்புண்டு அவர்கள் யார்என்று தெரியாது எனவே இது சுகாதாரப் பிரிவுக்கு உள்ள பெரும் பிரச்சினை அவ்வாறு யாரும் இனங்காணப்பட்டால் அவர்களின் இரகசியம் மிகவும் அவதானமாகப் பாதுகாக்கப்படும். யாரும் பயம் இன்றி சுகாதாரப்பிரிவினருடன் தொடர்பு கொள்ளலாம்.

இனங்காணப்பட்ட ஏச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளா னவர்கள் 539 பேராக இருந்தாலும் 3500முதல் 7500பேர்வரை இந்தத் தொற்றுக்கு உள்ளாகி இருக்கலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கின்றது. இதுவரை இலங்கையில் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாகி 121பேர் இறந்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. என்று வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதராதச் சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோய் தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் நிகழ்வு வவுனியா பொது மருத்துவமனையில் அண்மையில் நடைபெற்ற போது அவர் மேலும் கூறியதாவது. இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது யாழ். மாவட்டத்திலுள்ள எண்ணிக்கையானது பெரிய அளவாக இருக்கிறது. இது எதிர் காலத்தில் பாரிய பிரச்சினையினைத் தோற்றுவிக்கும் எனவே மக்கள் அனைவரும் விழிப்பாகச் செயற்படுவது மிகவும் முக்கியமானது.

வடகிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் 20 பேரும், மட்டக்களப்பில் 07 பேரும், திருகோணமலையில் 06 பேரும், முல்லைத்தீவில் 02 பேரும், அம்பாறையில் 05 பேரும், கிளிநொச்சியில் 02 பேரும், வவுனியாவில் ஒருவரும் இனம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களைவிட எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானோர் கொழும்பில் 204 பேரும், கம்பகாவில் 84 பேரும், களுத்துறையில் 34 பேரும், குருணாகலையில் 27 பேரும், புத்தளத்தில் 14 பேரும், கேகாலையில் 12 பேரும், இரத்தினபுரியில் 04 பேரும், காலியில் 15 பேரும், மாத்தறையில் 08 பேரும், நுவரெலியாவில் 04 பேரும், அனுராதபுரத்தில் 07 பேரும், பொலநறுவையில் 02 பேரும், மொனராகலையில் 02 பேரும் ஏனைய இடங்களில் இருந்து 29 பேரும, இனம் காணப்பட்டுள்ளனர். என்றும் வவுனியா மாவட்டப் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (21)

## மொழிப்பயிற்சி

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச திணைக்களப் பணியாளர்களுக்கான ஆங்கில, சிங்கள வகுப்புக்கள் முல்லை கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது,. (20)



*துணுக்காய்ப் பிரதேசத்தில் கொத்தம்பியார் குளப் பகுதியில் இருக்கும் பழமையான வௌவால் பாலத்தையே படத்தில் காண்கின்றீர்கள் கனரக வாகனங்கள் உட்படப் பெருமளவு வாகனங்கள் நாளாந்தம் இப்பாலத்தினூடாக பயணித்து வரும் நிலையில் பாலம் சீரான முறையில் புனரமைக்கப்படாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம் –அன்ரனி)*

# மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த அக்கராயன் பிரதேச காவல்துறை முயற்சி

(கிளிநொச்சி)

அக்கராயன் பிரதேச காவல் பணிமனையினரால் பொது மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளைத் தொடர்ச்சியாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாகக் கடந்த திங்கட்கிழமை கோணாவில் ஊற்றுப்புலம் கிராமத்தின் கருத்தரங்கு அக்கராயன் காவல் பணிமனைப் பொறுப்பாளர் அருளன் தலைமையில் நடைபெற்றது. 200 இற்கும் மேற்பட்ட ஊற்றுப்புலம் கிராம மக்கள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கில் வீதி ஒழுங்கு, குற்றத்தடுப்பு தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அண்மை நாட்களாக அக்கராயன் பிரதேச காவல்துறையினரால் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரவு நேர வீதிரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (15)

# நவீன நடமாடும் பற்சிகிச்சை வாகனம் உலக தரிசன நிறுவனம் வழங்கும்

**–இரு அம்பியுலன்ஸ்களும் கையளிக்க ஏற்பாடு**

(செட்டிகுளம்)

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் சகலவசதிகளையும் கொண்ட பற்சிகிச்சை நடமாடும் சேவை நடைபெற இருப்பதாக மன்னார் மாவட்டத்தின் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சகல வசதிகளையும் கொண்ட வாகனத்தை உலக தரிசன நிறுவனம் வழங்கவுள்ளது. இது இவ்வாறு இருக்க பண்டிவிரிச்சான் மத்திய மருந்தகத்திற்கும், அடம்பன் வைத்தியசாலைக்கும் நீர்ப்திட்டத்தின் மூலம் நோயாளர் காவுவண்டி (அம்பியுலன்ஸ்) வழங்கப்படவுள்ளதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்துள்ளார். இந்த நோயாளர் காவு வண்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி உத்தியோக பூர்வமாக கையளிக்கப்படவுள்ளது. ஏற்கனவே பண்டிவிரிச்சான் மக்களுக்கு வைத்திய சேவைகள் போதிய அளவாக கிடைக்காத நிலையில் அம் மக்களுக்கான நடமாடும் வைத்திய சேவைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (21)

# பழ வியாபாரிகளால் சந்தையில் துர்நாற்றம்

(மல்லாவி)

மல்லாவி பொதுச் சந்தைப் பகுதியில் பழவகை வியாபாரங்களை மேற்கொள்ளும் வியாபாரிகள் கழிவுகளைச் சந்தைப் பகுதியில் கொட்டி வருவதால் துர்நாற்றம் வீசி வருகிறது.

இதனால் பொதுச் சந்தைப் பகுதிக்கு வருவோர் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

சுகாதார நடை முறைகளைக் கையாள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேட்கின்றனர். (24)

# கோலவுடை உத்தியோகத்தர்களுக்கான பதிலாட்கள் தெரிவு விண்ணப்பம் கோரல்

(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள அஞ்சல் அலுவலகம், உப அஞ்சல் அலுவலகங்களில் கோலவுடை உத்தியோகத்தர்களுக்கான பதிலாட்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்கான அறிவித்தல் கிளி/முல்லை. மாவட்டப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகரால் அஞ்சல், உபஅஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கல்வித்தகைமை குறைந்தது 8ஆம் வகுப்பு சித்தியெய்தி இருத்தல் வேண்டும் அத்துடன் இலங்கைப் பிரஜா உரிமையுடையவராகவும் விண்ணப்பிக்கும் அஞ்சல், உபஅஞ்சல் அலுவலக பிரதேசத்தில் குறைந்தது இரண்டு வருடங்கள் வசித்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 14.08.2004 திகதிக்கு முன்னதாக திவுத்தபாலில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் வவுனியா/முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

இப்பதவிக்கு முன்னர் விண்ணப்பித்திருந்த விண்ணப்பங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் சகலரும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப மாதிரிப் படிவத்தை அண்மையிலுள்ள அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களில் பார்வையிட்டுத் தயாரிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (14)

## புத்தகங்கள் கையளிப்பு

(மன்னார்)

சோவா நிறுவனம் மாந்தை மேற்கில் உள்ள மடு கல்வி வலயத்திற்கு ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான பாடசாலை நூல் நிலைய புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவற்றை அண்மையில் வழங்கியது. இதனை மடு வலயக்கல்விப் பணிப்பாளர், வட்டக்கண்டல், தேவான்பிட்டி, வெள்ளாங்குளம் போன்ற பின்தங்கிய பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளார். (15)

*–புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர்–*

# தாயகம் திரும்பிய 750 குடும்பங்கள் மன்னார் மாவட்டத்தில் மீள்குடியமர்வு

(மன்னார்)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தில் ஏறத்தாழ 750 குடும்பங்கள் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பி மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இதில் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் மாத்திரம் 600 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

குறிப்பாக பேசாலை வடக்கு, பேசாலை தெற்கு ஆகிய இடங்களிலும் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் வங்காலை, முருங்கன் போன்ற கிராமங்களிலும் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இவர்களில் 50 வீதமான குடும்பங்களுக்கு நிக்கொட் நிறுவனம் 25 ஆயிரம் ரூபாவினை ரொக்கமாக வழங்கியுள்ளது.

இதனைவிட யு.என்.எச்.சி.ஆர், கிராம அபிவிருத்தி நிறுவனம், வாழ்வோதயம் போன்ற நிறுவனங்களும் பல உதவிகளை வழங்கியுள்ளன. (மி)

# முன்பள்ளி ஆசிரியைகளுக்கு முதலுதவிப் பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

முன்பள்ளி ஆசிரியைகளுக்கான ஒருநாள் முதலுதவிப் பயிற்சி நெறி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

வேல்ட் விசன் நிறுவனத்தின் நிதியுதவியில் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் நடைபெற்ற இப்பயிற்சி நெறியானது கிளிநொச்சி பொது அமைப்புக்களின் இணையத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் யோ.நிலா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத் திட்டமிடல் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம். வேல்ட் விசன் நிறுவனப் பிரதிநிதி ஆகியோர் கருத்துக்களை வழங்க, கிளிநொச்சி சுகாதார திணைக்கள பிரதிநிதி முதலுதவி தொடர்பான கருத்துக்களை வழங்கினார். சிறப்புரையினை தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ராஜன் நிகழ்த்தினார்.

நிகழ்வின் இறுதியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 50 முன்பள்ளிகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ச)

# அடுத்த யுத்தம் ஜே.வி.பி.க்கானதா!

**1983**இல் இருந்து 1994 வரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் யுத்தகாலம். அதாவது ஐ.தே.கட்சி யுத்தத்தை நடாத்தியது. 1995இல் இருந்து 2002 வரையில் சுதந்திரக்கட்சிக்கான யுத்தகாலம் தற்பொழுது எழும் கேள்விகளானது. அடுத்தது ஜே.வி.பி.க்கான யுத்தகாலமா? அது எப்பொழுது? என்பதே.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்ற மக்களின் நம்பிக்கை தற்பொழுது சிதைவடைந்து வருகின்றது. யுத்தத்திற்கான சூழ்நிலை படிப்படியாக வளர்ச்சிகண்டு வருகின்றது என்பதே மக்களின் தீர்மானமாகவுள்ளது. எப்பொழுது யுத்தம் தொடங்கும் என்பதை மட்டுமே தம்மால் மதிப்பிட முடியாது உள்ளது என்பதே மக்களின் அபிப்பிராயமாகவுள்ளது.

இவ்வாறு மக்கள் சமாதான முயற்சிகள் மீது அவநம்பிக்கை கொண்டதற்கு உறுதியான காரணங்களும் இல்லாமல் இல்லை. குறிப்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தி ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. இரு தரப்பும் நெருங்கி வருவதற்கோ, பேச்சுவார்த் தைகளை ஆரம்பிப்பதற்கோ எந்தவித சமிக்ஞைகளும் வெளிப்படுத்துவதாக இல்லை.

அதுமட்டுமல்ல, தற்பொழுது அமுலிலுள்ள யுத்த நிறுத்தமானது பெரும் அச்சுறுத்தலைச் சந்திக்கும் சூழ்நிலையும் வெகு வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் உருவாகியுள்ள பதட்டமானது யுத்தநிறுத்த உடன்பாட்டை முறிக்கும் அளவிற்கு வளர்ச்சிப் போக்கிலுள்ளது.

தற்போது-வளர்ச்சி கண்டுவரும் யுத்த நிறுத்தத்திற்கு எதிரான போக்கு மாற்றப்படுதல் வேண்டும் எனின் இரண்டு முக்கிய முடிவுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிவரும்.

1. உடனடியாகக் கிழக்கில் பதட்டத்தைத் தோற்றுவிக்கும் படை நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்தவேண்டும். குறிப்பாக கருணாவின் பெயரிலோ அன்றி அதனைச் சாட்டாகக்கொண்டோ கிழக்கில் வன்முறைச் சம்பவங்களை மேற்கொள்வதையோ, அதற்கு உடந்தையாக இருப்பதையோ இராணுவப் புலனாய்வுத்துறை நிறுத்தவேண்டும்.

2. விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பித்தல் வேண்டும். அதாவது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் உடன் ஆரம்பிக்கவேண்டும்.

ஆனால், இன்று இதற்கு ஏற்றதானதொரு சூழ்நிலை நிலவுகின்றதா என்பதே இன்றுள்ள கேள்வியாகும். முதலாவது, கருணாவிற்கு கொழும்பில் பாதுகாப்புக் கொடுத்து வைத்துள்ள அரசாங்கம் கருணா எங்கிருக்கின்றார் என்பது தமக்குத் தெரியாது என்றும், அவருடன் தமக்கு எந்தவித தொடர்பும் இல்லை எனத் தெரிவிக்கின்றது.

ஆனால், கருணா கொழும்பில் தான் உள்ளார் என்பதும் அவருடன் அரச தரப்பினர் தொடர்புகொண்டுள்ளனர் என்பதும் தொடர்பான தகவல்கள் வெளிவந்தவண்ணமே உள்ளது. குறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருணாவுடன் தொடர்பில் உள்ளார். அதனை அவரே உறுதியும் செய்கிறார். பல அரசியல் வாதிகள் கருணாவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுமுள்ளனர். கருணாவும் தான் பல தரப்பினருடன் பேச்சுக்களை நடாத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். இறுதியாக வெளியாகியுள்ள தகவலின் படி கருணா தனது மனைவியின் பெயரில் பல மில்லியன் ரூபா பெறுமதியான ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம் ஒன்றைக் கொழும்பில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது ஒருபுறம் இருக்க-கருணாவின் பெயரில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை மேற்கொள்ளும் வன்முறை நடவடிக்கைகளும், அதற்கு சிறிலங்கா அரசாங்கத்தின் ஆதரவும் உண்டு என்பதற்கும் அண்மைக்காலச் சம்பவங்கள் பல எடுத்துக்காட்டாக கூறத்தக்கவையாகும் குறிப்பாக ஹிங்குராங்கொட விகாரையில் 14 தமிழ் இளைஞர்கள்-கருணாகுழு சார்ந்தவர்கள்-ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதும், பின்னர் இராணுவப் புலனாய்வுத்துறையினரின் அழுத்தத்தினால் அவர்கள் விடுவிக்கப்பட்டமையும் சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

இது மட்டுமன்றி, கருணாகுழுவுடன் தொடர்பற்றவர்களையும் கருணாவின் பேரில் பயன்படுத்தி பதட்டத்தைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளிலும் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினர் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை பணத்தாசைகாட்டி இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுத்த அது முற்பட்டுள்ளதற்கான ஆதாரங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

ஆனால், கிழக்கில் பதட்டத்தைத் தணிக்கும் வகையிலான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதற்கான சமிக்ஞைகள் குறைவாகவே உள்ளன. மாறாக பாதுகாப்பு என்ற ரீதியில் படைக்குவிப்பு, சோதனை நடவடிக்கை என்ற ரீதியில் பதடடத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுபவையாவுள்ளன. இதன் மூலம் பதட்டத்தை உருவாக்கி புலிகளை அரசியல், இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தி விடலாம் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இரண்டாவதாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாடும் தற்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும் என்பதற்காக முன்னேற்றகரமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாக இல்லை.




சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும், அதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்து வருகின்ற போதும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு ஜே.வி.பி.தனது பலமான எதிர்ப்பைக் காண்பித்து வருகின்றது. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தைகளை சனாதிபதி ஆரம்பிப்பாரேயானால், அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவிடப்போவதாகவும் ஜே.வி.பி.எச்சரித்துள்ளது.

ஜே.வி.பி.தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக எடுத்துள்ள நிலைப்பாடானது கடந்த காலத்தில் சிறிலங்கா எதிர்க்கட்சிகள் எடுத்த நிலைப்பாடு போன்றுள்ளது. அதாவது இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு அன்றி அதிகாரப் பரவலாக்கலுடனான தீர்வு என்பதை யார் எதிர்க்கட்சியாக இருப்பினும் எதிர்த்தது போன்று ஆளும் கட்சியாக இருந்த வண்ணம் எதிர்த்து வருகின்றது.

ஜே.வி.பி.யினரைப் பொறுத்து இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை மற்றும் எந்தவகையிலான அதிகாரப்பரவலாக்கல் என்பதற்கும் அது எதிரானதாகும். ஆகையினால் ஜே.வி.பி.யின் ஆதரவுடன் ஆட்சியை நடத்தும் அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசைக்கு வர முடியுமா? என்பது சந்தேகமே.

அடுத்ததாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர்கள் பலர் உள்ளனர். இதனை அண்மையில் சனாதிபதியின் செயலாளர் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு மக்கள் அளித்த அங்கீகாரமே மாகாணசபைத் தேர்தல் வெற்றி என சனாதிபதி சார்பாக வெளியிட்ட அறிக்கைக்கு அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டிருந்த கருத்துக்களே போதுமானதாகும். அமைச்சர் மங்கள சமரவீர சனாதிபதி சந்திரிகாவின் செயலாளர் தெரிவித்த கருத்துக்கள் சனாதிபதியின் கருத்தல்ல எனத் தெரிவித்திருந்தார்.

ஜே.வி.பி.யினைப் பொறுத்து அது தனிப் பலம்பொருந்திய அரசியல் கட்சியாகத் தன்னை வளர்த்தெடுத்துள்ளது. இதற்கு அக்கட்சி இடதுசாரிப் போர்வைக்குள் பௌத்த-சிங்கள தீவிர அடிப்படைவாதத்தை வளர்த்தெடுத்ததே காரணமாகும். எடுத்துக்காட்டாக ஜாதிகஹெல உறுமய போன்ற வெளிப்படையான பௌத்த தீவிர அடிப்படைவாதக் கட்சியுடன் ஏனைய பிரதான சிங்களக் கட்சிகள் மோதிக்கொள்ளாமல் இருக்கும் போதே ஜே.வி.பி. மோதிக் கொண்டிருபதற்குக் காரணம், பௌத்த-சிங்கள அடிப்படைவாதத்திற்கு யார் தலைமை தாங்குவது என்பது குறித்த போட்டியே யாகும்.

ஆனால், இதில் ஜாதிகஹெல உறுமயவைவிட ஜே.வி.பி.க்கே வாய்ப்பு அதிகம். ஏனெனில் அக்கட்சிக்கு ஒரு தொகுதி இளைஞர்கள் பின்புலமாக உள்ளனர். ஆகையினால், ஜாதிகஹெல உறுமயவைவிட ஜே.வி.பி. வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன.

இதே சமயம் ஜே.வி.பி.யின் இனப்பிரச்சினை மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான நிலைப்பாடானது கடந்த காலத்தில் பௌத்த-சிங்களப் பேரினவாதத்திற்குத் தலைமை தாங்கிய இரண்டு பிரதான சிங்களக்கட்சிகளின் கடந்தகால நிலைப் பாடுகளில் இருந்து பெரும் மாற்றம் எதையும் கொண்டதாக இல்லை.

எடுத்துக்காட்டாக விடுதலைப்புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்த பேச்சுவார்த்தைகளை எதிர்க்கும் ஜே.வி.பி. அது குறித்து தெரிவிக்கும் கருத்துக்கள், முன்னைய ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டையே வெளிப்படுத்துவதாகவுள்ளது. கடந்தகாலத்தில் ஐ.தே.கட்சியும், பொ.ஐ.முன்னணியும் (சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்) தமிழருக்கு எதிராகப் போரிட்ட போது அவர்கள் வெளியிட்டகருத்தானது இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலம் தீர்வு, விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத்தீர்வு என்பதேயாகும். இதில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படும். வரை இராணுவ நடவடிக்கை எனவும், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கும் வரையில் யுத்தம் எனக் கூறியவர்களும் உண்டு.

இதையொத்த நிலைப்பாட்டையே தற்பொழுது ஜே.வி.பி. கொண்டுள்ளது. இதனை வெளிப்படுத்துமாப் போன்றே, மாகாணசபைத் தேர்தல் வெற்றியின் பின் கொழும்பில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான சுவரொட்டிகளை ஒட்டிய ஜே.வி.பி. அதில், தன்னாட்சி இடைக்கால நிர்வாக சபைக்குத் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இது குறித்து விளக்கம் அளித்துள்ள ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இச் சுவரொட்டிகள் புலிகளின் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரானதே ஒழிய சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரானதல்ல எனத் தெரிவித்துள்ளார். ஆனால், ஜே.வி.பி. இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் என்பதை எதிர்ப்பதால் சமாதானப் பேச்சுவார்த்தை எதற்காக என்ற கேள்வி தவிர்க்கமுடியாது எழுகின்றது.

அது மட்டுமல்ல, ஜே.வி.பி.யின் இச் சுவரொட்டியானது தனியாக விடுதலைப் புலிகளுக்கும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கும் எதிரானதாக ஒட்டப்பட்டுள்ளதா அன்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் எச்சரிக்கும் வகையில் ஒட்டப்பட்டுள்ளதா என்பது குறித்தும் கேள்வி இல்லாமல் இல்லை.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகா தரப்பு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனச் சர்வதேச சமூகத்திற்கு உறுதி கூறியிருந்தார். தற்பொழுது தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில், பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலையில் ஜே.வி.பி.யின் இச் சுவரொட்டிகள், சனாதிபதி சந்திரிகாவை எச்சரிப்பது போன்றும் உள்ளது எனில் தவறாக மாட்டாது.

இந்த வகையில் பார்க்கையில்சனாதிபதி சந்திரிகா பெரும் இக்கட்டொன்றில் மாட்டிக் கொண்டுள்ளார் என்று கூடக் கூறலாம். அதாவது சர்வதேசத்தின் அழுத்தம், நாட்டின் பொருளாதாரத் தேவைகள் கருதிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதா? அன்றி அரசாங்கத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் பேச்சுவார்த்தைகளை புறம் தள்ளுவதா? என்பதே ஆகும்.

ஆனால், இதற்காக சனாதிபதியின் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான செயல்களுக்கு நியாயம் கற்பிக்கமுடியாது. ஏனெனில் நாட்டில் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை உருவாவதற்குச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் நடவடிக்கைகளே காரணமாகும். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த பெரும்பான்மை அரசாங்கம் ஒன்றைத் தனது அதிகார அபிலாசைகளுக்காகக் கலைத்து, ஜே.வி.பி. அரசியலில் முதன்மை பெறவும், அச்சுறுத்தல் விடும் அளவிற்கு வாழவும் வழிவகுத்தவர் சனாதிபதி சந்திரிகாவேயாகும்.

இத்தகையதொரு சூழ்நிலையில் ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் போடும் முட்டுக்கட்டையும், சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினரின் நடவடிக்கைகளும் இணைந்து தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகளும், யுத்த நிறுத்தத்திற்கும் விடுக்கும் சவாலானது அடுத்ததொரு யுத்தத்திற்கு இட்டுச் செல்லுமானால் அதற்கான தார்மீகப்பொறுப்பு ஜே.வி.பி.யினுடையதாகவே இருக்கமுடியும். அதாவது ஜே.வி.பி.யின் யுத்தமாக அதனைக்கொள்வதில் தவறு இருக்கமாட்டாது. ○○○

**ஜெயராஜ்**

# சுயநல மிகுதியால் திண்டாடும் இந்திய அரசியல்...



கருணாநிதி



ஜெயலலிதா

இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து புதியமத்தியரசு பல பிரச்சினைகளுக்கு எப்படி முகம் கொடுப்பது என்று திண்டாடி வருகின்றது.

மத்தியரசை திணற வைக்க வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயகக்கூட்டணி புதிது புதிதாகப் பிரச்சினைகளை ஏற்படுத்தியும், பழையதை கிளறிக் கையிலெடுத்தும் வருகின்றது.

புதிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவிக்கு வந்ததிலிருந்து இதுவரை இரு அவைகளிலும் கூட்டத் தொடர் சுமுகமாக முடிந்திடவில்லை. கூச்சல்,குழப்பம் என்று அமளிதுமளியால் இரு அவைகளும் நிரம்பி வழிகின்றன.

இதனால் இரு அவைகளிலும் கூட்டத் தொடர்கள் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இந்த நிலை* காங்கிரஸ் கூட்டணிக்குத் தலைவலியையும், பாரதிய ஜனதா கூட்டணிக்கு சந்தோஷத்தையும் ஏற்படுத்தாமல் இருக்க வாய்ப்பில்லை.


இந்தநிலை நீடிக்கவேண்டும் என்பது போலவே எதிர்க்கட்சிகள் காய்களை நகர்த்தி வருகின்றன. அதனால் தான் மக்களவையின் முதற் கூட்டத் தொடரிலேயே"மாட்டுத்தீவன ஊழல் பேர்வழிகளே பதவியை விட்டு வெளியேறுங்கள் "என்று எதிர்க்கட்சி அமைச்சர்கள் சபாநாயகரை முற்றுகையிட்டு கூச்சலிட்டனர்.

இதற்கு காங்கிரஸ் கூட்டணி அமைச்சர்கள் "பாபர் மசூதி இடிப்புக் குற்றவாளிகளே, சவப்பெட்டி ஊழல் பேர்வழிகளே......... உட்காருங்கள்" என்று எதிர்க் குரல் எழுப்பியுள்ளனர்.

இந்தநிலை முதற்கூட்டத் தொடருடன் முடிந்து விடவில்லை. ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் புதிது புதிதாகப் பிரச்சினைகள் முளைவிட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.



அலிஅஷ்ரப்



ஜெய்பிரகாஷ்



ஜெகதீஷ்

நேற்று வரை ஆளும் கட்சியாக இருந்த போது "ஒருநாள் அவையை நடத்த முடியாது போனால் எத்தனை கோடிகள் நட்டம் தெரியுமா...." என்று இந்தியா மீது அதீத அக்கறையோடு கணக்குச்சொல்லி வந்த பாரதியஜனதா கூட்டணி இப்போது எதிர்க்கட்சியானவுடன் நட்டக்கணக்கை புறம் தள்ளித் தாமே இரு அவைகளிலும் வெளிநடப்பு, கூச்சல், குழப்பம் என்பவற்றை ஏற்படுத்துகின்றது.

இதனை யாரும் சுட்டிக் காட்ட முற்படாது இருப்பதற்காகவே "முன்பு இப்படித்தான் காங்கிரஸ் செயற்பட்டது'' என்று விளக்கமும் அளித்துக்கொண்டிருக்கின்றது

இரு அவைகளிலும் காரசாரமாக விவாதிக்கப்படும் பிரச்சினைகளும் இருக்கின்றன.

*நடிகர் ராஜ்குமார் மீட்பில் சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு இருபது கோடி ரூபா கொடுத்ததாகவும், இதனைச் சிறையில் இருந்து கரீம்தில்லிடம் கர்நாடக முன்னாள் முதலமைச்சர் கிருஷ்ணா பெற்றுக்கொண்டுள்ளார் இதற்கு மத்தியரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*வரவு செலவுத் திட்டத்தில் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் படியான திட்டங்கள் எவையும் இல்லை.

*இந்திய இராணுவத்திற்கு ரஷ்யாவிடம் இருந்து துப்பாக்கிகள் வாங்க வேண்டும் எனும் காங்கிரஸின் ரேணுகா சௌத்திரியின் பரிந்துரை.

*கோவா, ஹரியானா, உத்தரப்பிரதேசம், குஜராத் ஆளுநர்களைப் பதவி நீக்கியமை தவறு எனும் குற்றச்சாட்டு

*நிதி நிலை அறிக்கையில் பீகாரை பின் தங்கிய மாநிலமாக அறிவித்துக் கூடுதல் நிதி ஒதுக்கியமை.

*பஞ்சாப் முதலமைச்சர் அமர் சேந்சிங் நதி நீர்ப்பகிர்வை இரத்துச் செய்துள்ளமை.

*ஈராக்கிற்கு இந்தியப் படைகளை அனுப்புவது போல் வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங் அமெரிக்காவில் கூறியது.

இதேவேளை இரு அவைகளிலும் எதிர்க்கட்சியினர் கூச்சல், குழப்பத்துடன் வெளிநடப்புச் செய்யும் பிரச்சினைகள் தற்போது இரண்டுதான்.

*கோத்ரா ரயில் எரிப்பு விசாரணைகளைப் புகையிரத அமைச்சர் லல்லுப் பிரசாத் யாதேவ் மீண்டும் ஆரம்பிப்பதற்கு உத்தரவிட்டுள்ளமை.

*ஊழல்,கிரிமினல் குற்றச் சாட்டுடையவர்கள் மத்திய அமைச்சரவையில் இருந்து பதவி நீக்கப்படவேண்டும்.

கோத்ரா ரயில் எரிப்புக்கும் தமக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை அது ஒரு மதக்கலவரம் என்று இது வரை கூறிவந்த பாரதிய ஜனதா கட்சி தற்போது லல்லுப்பிரசாத்தின் உத்தரவினால் ஏன் தாம சங்கடப்படவேண்டும்...?

**அ.கலைவாணி**

அப்படியெனில் லல்லுப்பிரசாத் யாதேவ்வின் கோத்ரா மறு விசாரணை என்பது பாரதிய ஜனதாவை திண்டாட்டத்திற்குத் தள்ளியுள்ளதா...?

அடுத்து ஊழல் குற்றச்சாட்டுக்கள் தேச விரோதக் குற்றச்சாட்டுக்கள் என்பன இந்தியாவில் மட்டுமல்ல எல்லா நாடுக ளிலும் அமைச்சர்கள் மீது சுமத்தப்படுவது தான்!.

இந்தியாவில் இந்த விடயம் விதி விலக்காக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

பிரிட்டிஷ் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கும் போது நேதாஜி மீது தேசவிரோதக் குற்றத்தைப் பதிவு செய்திருந்தது.

அன்று தொடக்கம் இந்திய அரசியலில் ஊழல், கிரிமினல், தேசவிரோதம் எனும் குற்றச்சாட்டுக்களும் ஒட்டிக்கொண்டு தான் இருக்கின்றன.


இந்த வகையில் 1977 இல் ஜனதாக்கட்சி வெற்றியீட்டியது. ஜோர்ஜ் பெனாண்டஸ் வெடிகுண்டு, சதி வழக்கு குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்ட நிலையில் தான் மத்திய அமைச்சராகப் பதவியேற்றார்.

தேவகௌடா பிரதமராக இருந்த போது காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி மீதுள்ள கிரிமினல் வழக்கைச் சரியான முறையில் நடத்த விடாது இழுத்தடிப்பதாக எதிர்க்கட்சிகள் தேவகௌடா மீது குற்றம் சுமத்தின. இதனால் 'குற்றம் யார் செய்திருந்தாலும் அவர்கள் விசாரணைகளில் இருந்து தப்பிக்க விடமாட்டேன்' என்று தேவகௌடா உறுதியளித்தார்.


இதன் எதிரொலி தேவகௌடாவின் அரசு கவிழும் நிலைக்குத் தள்ளிவிட்டது.

கூட்டணி அரசில் இருந்த தி.மு.க.மீது குற்றமொன்றை சுமத்திய காங்கிரஸ் தலைவர் சீதாராம்கேசரி பிரதமர் தேவகௌடாவுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டமையே இதற்குக் காரணம்.

இதேபோல் இந்திய இராணுவத்திற்கு சுவீடனிடமிருந்து போஃபர்ஸ் பீரங்கி வாங்கியதில் ஊழல் செய்ததாக மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி 1986 இல் குற்றம் சாட்டப்பட்டார்.



அத்வானி



முரளிமனோகர்



ஜோர்ஜ்பெனாண்டஸ்



உமாபாரதி

அடுத்து பாரதிய ஜனதா ஆட்சியில் பாகிஸ்தானுடன் கார்கில் போர் நடந்தது. இதன் போது இந்திய இராணுவ வீரர்கள் போரில் மரணமடைந்தபோது அவர்களுக்கு சவப்பெட்டி வாங்கியதில் ஊழல் இருப்பதாக அன்று பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது இன்றும் குற்றச்சாட்டு நிலவுகின்றது.


பாபர் மசூதி 1992 டிசம்பர் 6ஆம் திகதி அன்று இடிக்கப்பட்டது. இதற்கு ரதயாத்திரை நடத்திய அன்றைய பாரதிய ஜனதா ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்த அத்வானிதான் காரணம் என்று இன்றும் அத்வானி மீது வழக்கும் இருக்கின்றது. குற்றச்சாட்டும் நிலவுகின்றது.



பிரேம்குப்தா



சிபுசோரன்



லல்லுப்பிரசாத்

இதே பாபர் மசூதி இடிப்பில் இன்றைய மத்திய பிரதேச முதலமைச்சர் உமா பாரதி, முரளி, மனோகர் ஜோஷி ஆகியோர் மீதும் வழக்குகள் இன்றும் நிலுவையிலுள்ளன.

அது மட்டுமன்றி இன்றைய தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 1996 இல் டான்ஸி நிலபேர ஊழலில் இரண்டு வருடம் சிறை தண்டனை அனுபவித்தவர்.

அத்துடன் வருமானத்திற்கு மீறி 66 கோடி ரூபா சேர்த்துள்ளதாக, குற்றச் சாட்டும் வழக்கும் நிலுவையிலுள்ளது.

தி.மு.க.கருணாநிதி 2002 இல் மேம்பால ஊழல் வழக்கில் ஏழு நாட்கள் சிறையில் இருந்தவர்.

எனவே உயர் பதவிகளுக்கு வருபவர்கள் மீது குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் படுகின்றதா.... அல்லது பதவிக்கு வந்ததுமே அவர்களெல்லோரும் ஊழல், கிரிமினல், சர்வதேச குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்களா.....? என்றும் வினா எழுவது சாதாரணம்.

ஆனால் இதுவரை உயர் பதவிகளில் வகிப்பவர்கள் மீது சுமத்தப்பட்ட எந்தவொரு குற்றச்சாட்டும் எவர்மீதும் இதுவரை நிரூபிக்கப் பட்டதுமில்லை... தண்டனை வழங்கப்படவுமில்லை...ஏன்...?

இதற்கு காரணம் இருக்கின்றது. எந்தவொரு ஆளும் கட்சியும் ஊழல், கிரிமினல், சர்வதேச குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு, அவர்கள் தப்பிக்க முடியாதவாறு புதிய சட்ட விதிகளைக் கொண்டு வருவதில்லை.

ஏனெனில் தாம் பிறப்பிக்கும் சட்ட விதிகளே "தன்கைவிரலே தன் கண்ணை குத்துவது" போல் தமக்கே "பூமராங்காக" திரும்பி வரும் என்பதை அறியாதவர்களல்ல.

அதனால்தான் பாரதிய ஜனதா ஆட்சியின் போதே மாட்டுத் தீவின வழக்கில் லல்லுப் பிரசாத் யாதேவ் குற்றம் சாட்டப்பட்டு இருந்த போதும் பாரதிய ஜனதாவால் லல்லுவை உள்ளே தள்ள முடியவில்லை.

தனது ஆட்சிக்காலத்திலேயே குற்றம் சுமத்தப்பட்ட லல்லுபிரசாத் யாதேவ் போன்றவர்களை தண்டிக்காது விட்டு விட்டு தற்போது காங்கிரஸுடன் கூட்டணி வைத்திருக்கும் லல்லு பிரசாத்தை காங்கிரஸ்,பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா அடம் பிடிப்பது பொருத்த முடையதா.. என்ற சந்தேகம் தோன்றாமலில்லை.

மறுபுறம் தேவகௌடா ஆட்சி கவிழ்ந்தது போல், பிரதமருக்கு அழுத்தம் கொடுப்பதானால், அவர் எதாவது இசகு பிசகாக தேவகொளடா போன்று லல்லபிரசாத் திற்கு எதிராக எதாவது சொல்ல நேரிட்டால்.... அதனால் கோபப்பட்டு லல்லுபிரசாத் தனது ஆதரவை விலக்கிகொள்ள... மத்தியரசு கவிழ ...?இதைதான் எதிர்க்கட்சிகள் எதிர் பார்க்கின்றதா.. எனும் வினாவும் இருக்கின்றது.

எது எப்படியோ.. பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை.. என்று நாட்டின் நலனைப் பற்றி விவாதிக்க வேண்டியவர்கள், அதனைப் புறம்தள்ளி தமது நலனுக்காகவும் தமக்கு பிடிக்கவில்லை என்பதற்காகவும் செயற்படுவது அழகற்ற செயலன்றி வேறில்லை.

அதுவும் இரு அவைகளிலும் தகாத வார்த்தைப் பிரயோகம், கூச்சல், குழப்பம், என்று உயர்பதவிகளில் இருப்பவர்கள் குழப்பவாதி போன்று செயற்படுவதால் இவர்களா மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்... இவர்களா... மக்களுக்காக பாடுபடபோகின்றவர்கள்.. என்றுதான் அரசியலை கூர்ந்து கவனிப்பவர்கள் விமர்சிக்கின்றார்கள்.

என்றாலும் இரு அவைகளும் அமளியின்றி செயற்படும் நாள் தான் எப்போது? இதுதான் இன்று இந்திய அரசியலில் மேலோங்கி நிற்கும் வினாவன்றி வேறில்லை.

★

# எதிர்க்கட்சிகளின் பெரும்பான்மை ஆட்சியை வீழ்த்துமா?

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கக்கேடான நடத்தைகளைக் கண்டித்தும் பாராளுமன்ற சனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதற்குமென ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கெதிராக எதிர்க்கட்சிகள் குற்றப்பிரேரணை ஒன்றை சபாநாயகரிடம் கையளித்துள்ளன. அதேவேளையில் எதிர்க்கட்சிகள் தமது பெரும்பான்மைப் பலத்தையும் தமது 114 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்தை இட்டு சமர்ப்பித்ததன் மூலம் அரசுக்கு ஒன்றைச் சொல்ல முற்பட்டுள்ளன.

அதாவது ஒரு வலுவற்ற நிலையில் உள்ள சிறுபான்மை அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றமுடியும். அல்லது ஆளும்கட்சியுள் தீர்மானங்களையும் திட்டங்களையும் தவிடுபொடியாக்கிவிடவும் முடியும் என்பதே அதுவாகும்.

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றிலே இன்று ஒரு பெரும்பான்மைப் பலத்துடன் இருப்பது என்பது ஒன்றும் மறுக்க முடியாத உண்மையாக இருந்தாலும் அவர்களால்



**ஸ்ரீபன்**

ஆளும் கட்சியை கதிரைகளில் இருந்து அகற்றிவிட முடியுமா? அல்லது அவ்வாறு அகற்றும் அளவிற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்ட கருத்துடன் செயற்படுமா என்பதே இன்றுள்ள பிரதான கேள்வி. அரசாங்கத்தை ஆட்சிக்கதிரையை விட்டு அகற்றுவதாயின் அதிலே இரண்டு பிரதான தலையீடுகள் முக்கியத்துவம் வகிக்கின்றன.

1. நிறைவேற்று அதிகார பலமுள்ள சனாதிபதியின் விருப்பு வெறுப்பு.

2. எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியிலே நின்று செயற்படுவது.


இவ்விரண்டு பிரதான காரணிகளும் ஒன்றுபட்ட நிலையிலே செயற்படுவது என்பது கல்லிலே நார் உரிப்பதற்குச் சமமாகும். ஆட்சியில் இருக்கும் அரசு இன்று சிறுபான்மைப் பலத்துடனே பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கவிருக்கின்ற சூழ்நிலையும் சந்தித்து வருவதும் ஒரு புறமிருக்க ஓர் சிறுபான்மைப் பலமுள்ள கட்சியானது ஆளும் கட்சியாக இருப்பதற்குப் பிரதான காரணமே பாராளுமன்றத்திற்கு வெளியே ஒரு நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி அதே கட்சியாக இருந்ததால் ஆகும்.

இன்று நடைமுறையிலே இருக்கும் ஆட்சியின் இருப்பும் சரி இனி நடக்கப் போகும் அரசியல் மாற்றமாயினும் சரி அரசியல் யாப்பு சட்டதிட்டங்களில் இருந்து பெரும் முரண்பாடுகளைக் கொண்டதாகவும் அல்லது அரசியல் சட்ட விதிமுறைகளுக்குள் சிக்குண்டு மீளவும் முடியாத விலகவும் முடியாத நிலைக்குள்ளே தள்ளப்பட்டிருக்கிறது என்பது வெள்ளிடைமலைபோல் தெரியும் ஒன்றாகும். ஆளும் கட்சியானது குறைந்த பட்சம் 113 ஆசனங்களையாவது தன்பால் வைத்திருந்து ஆட்சி செலுத்துவது அரசியல் யாப்புச் சட்டத்தின் கட்டாய விதிமுறையாகும். ஆனால், இன்றுள்ள அரசு அதாவது ஆளும்கட்சியானது 113 ஆசனங்களை நிரூபித்துக் காட்டமுடியாமல் அரசியல் யாப்புச் சட்ட விதி முறையோடு முரண்பட்டு நிற்கிறது. அதேவேளை எதிர்க்கட்சிகள் இப்படியான சிறுபான்மை அரசை வீழ்த்த முடியாத அல்லது அகற்ற முடியாத பரிதாபகரமான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்த இரண்டு பக்க முரண்பாடுகளுக்கும் இடைநடுவே தீர்மானிக்கும் ஒரு பெரும் சக்தியாக இருப்பது சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமே.

அதாவது பாராளுமன்றத்தைக் கலைத்து விடும் அதிகாரமும் அல்லது அதனை ஒத்தி வைக்கும் அதிகாரமும் சனாதிபதியின் கைகளிலேயே தங்கியிருக்கின்றன.

இந்த நிலையிலேயே எதிர்க்கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து ஆளும்கட்சிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாயினும் ஒரு ஆட்சியைக்





கலைத்து அரசாங்கத்தை மாற்றுவதற்கும் சனாதிபதியின் ஒத்துழைப்புத்தேவை. அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் வேண்டும். இந்த நிலைமையும் இன்றுள்ள ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சிகளால் நிறைவேற்ற முடியாது. நிலைமை இப்படியிருக்கும் போது எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு ஆட்சி யினைக் கவிழ்க்கக்கூடிய நடவடிக்கையொன்றை மேற்கொள்வதென்பது தற்போதைய அரசியல் நிலைமையிலே முடியாத காரியமாகும்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவுடன் பொதுவான கொள்கையுடன் செயற்பட முன்வந்தாலேயே பெரும்பான்மைப் பலத்தின் பெறுமதியும், வலிமையையும் நிரூபிக்க வழியேற்படும்.

இன்று எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற பிரதான கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, தமிழர்தேசியக் கூட்டமைப்பினர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ,மேல்மாகாண மக்கள் முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்தவர்களுமாவர். இதிலே பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியினர் வகுக்கும் திட்டங்களுக்குத் தலையசைத்துச் செல்லக்கூடிய கட்சிகளாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்,மலையக மக்கள் முன்னணி என்பன தற்போதைய நிலையிலே இருந்தாலும் தமிழர் தேசியக் கூட்டமைப்பினர், சமாதானத்தை ஆதரிக்கின்ற எந்தக் கட்சியினருக்கும் ஆதரவு கொடுக்கின்ற நிலையிலே இருக்கும், அல்லது நடுநிலையை வகிக்கும். ஆயினும் விழுந்தடித்து ஓடிச்சென்று அரசை வீழ்த்துவதற்காக எதிர்க்கட்சியுடன் சேர்ந்து விடப்போவதில்லை. ஏனெனில் வரலாற்றுவழியாக பதவிக்கு வந்த எந்தக்கட்சியும் தமிழருக்கான உரிமைகள் எதையும் முன் வந்து கொடுக்கவோ அல்லது தமிழரின் பிரச்சினைகளைத் தீர்த்துவிடவோ முன்வந்ததில்லை. இந்த நிலைமையில் எதிர்க்கட்சிகளை ஆதரிக்கத் தேவையுமில்லை. ஆளும் கட்சியை ஆதரிக்கத் தேவையுமில்லை (காரணமில்லாமல்) நிலைமை இப்படியிருக்க புதிதாக அரசிய லில் நுழைந்த ஜாதிக ஹெல உறுமயவினர் ஒரு உறுதியான அரசியற் கொள்கையோ, உறுதிப்பாடோ அல்லது வேலைத்திட்டங் களோ இல்லாத நிலைமையில் நாளொரு வண்ணமும் பொழுதொரு கருத்துமாக கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக் கும் ஒருபெளத்த பேரினவாதக் கட்சியாகும். இது ஏற்கனவே இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகளை விமர்சிக்கின்ற ஒரு கட்சியாகவே இருந்து வந்தது. அதே வேளை ஆளும் கட்சி உறுப்பினர் சிலரால் பாராளுமன்றிலே வைத்து இதன் உறுப்பினர்கள் சிலர்தாக்கப்பட்டபோதிலும் அரசினை ஆட்சியில் இருந்து அகற்று வதற்குத் தாம் துணைபோகப் போவ தில்லை என கருத்து வெளியிட்டும் உள்ளது.



இந்த நிலையிலே எதிர்க்கட்சியின் பெரும்பான்மையில் அங்கம் வகிக்கும் ஹெல உறுமயவின் 9 பாராளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகளுடன் ஒரு பொதுவான கருத்தொருமைப்பாட்டுக்கு வரப்போவதில்லை. இந்த நிலையில் எதிர்க்கட்சிகளின் அணியானது பலம் கொண்டதாக செயற்பட முடியாத நிலைமையே காணப்படுகிறது. எனினும் தாம் தாக்கப்பட்ட நிலைமைக்கும், பாராளுமன்றிலே ஆளும் கட்சி உறுப்பி னர்கள் நடந்து கொண்ட அநாகரிகமான செயற்பாடுகளுக்கும் கண்டனம் தெரிவிக்கும் பிரேரணையை சபாநாயகரிடம் ஒப்படைப்பதற்கு மட்டும் தமது ஆதரவை தெரிவித்துள்ளார்.

ஆக மொத்தத்தில் ஹெல உறுமய எந்தக் கட்சியுடனும் இணைந்து போகவும் முடியாது ஆனால் எதிர்ப்பினையும் வெளிப்படுத்த சங்கடப்படும் ஒரு திரிசங்கு நிலையிலேயே இருந்து வருகின்றது.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியினால் அரவணைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் ஏனைய சிறு கட்சிகளும் கூட எந்த நிலைமையிலும் தமது கூட்டைஉடைத்துக் கொண்டு வெளியேறவும் கூடும். அதாவது சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் ,இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன வரலாற்று வழியாகவே ஆளும்கட்சியுடன் இணைந்து பதவிகளைப் பெற்று சுகபோகங்களை அனுபவித்து வந்தவர்களாகையால் அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்து சற்று குறைவான சலுகைகளை தொடர்ந்தும் அனுபவித்துக் கொண்டிருக்க தயாரானவர்கள் அல்ல. தற்போதும் ஆளும் கட்சியிலே இணைவதற்கு மித மிஞ்சிய நிபந்தனைகளுடன் தொடர்புகளை வைத்துச் கொண்டிருப்பவர்கள் .ஒருவேளை அரசாங்கக் கட்சியினர் இவற்றை வழங்க முன்வந்தாலும் சரி, அல்லது வேறு இரகசிய ஒப்பந்தங்களை செய்து கொள்ளு கின்ற பட்சத்திலாகிலும் சரி கொப்புத்தாவி விடுவார்கள; இந்த நிலைமையிலே எதிர்க்கட்சியின் பெரும்பான்மை என்பது மாறி வீசும் பருவக்காற்றுப் போன்றதாகவே நிகழ்காலத்தில் இருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்காவின் அரசியல் சாணக்கியத்திற்குள் அகப்பட்டு எதிர்க்கட்சியிலே இருக்கும் இந்த சிறு கட்சிகள் தமது பிரதி நிதித்துவத்தைச் சரியான முறையிலே பயன்படுத்த தயாரானவர்களாக இருப்பார்களேயானால் உறுதியான கொள்கையுடன், திடமான செயற்பாட்டுடனும் இருப்பார்கள். இது தமது இனத்திற்கான தேவைகளை பூர்த்தி செய்வதில் வெற்றியையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதில் மாற்றுக் க்ருத்தெதுவுமில்லை.

ஆனால் இன்றைய இலங்கையின் அரசியல் நிலைமைகள் ஊகங்களுக்குள் அடக்கமுடியாத நிலைமைகளில் இருக்கிறது. அதாவது எந்த நேரத்திலும் எதுவும் நிகழலாம் அது சாதாரணமானது என்ற நிலைப்பாட்டையே மக்கள் மனதில் பதிய வைத்துள்ளது.

அரசியல் வாதிகளின் குளறுபடிகளும் குறிக்கோள்கள் அற்ற செயற்பாடுகளும்



மக்களை விசனம் கொள்ளவே வைத்து வருகின்றன.

குறிப்பாக கடந்த பாராளுமன்றிலே நடந்து கொண்டவிதமும், நேரத்திற்கொருமுறை விட்டுவரும் அறிக்கைகளும், வாக்குப்புரட்டுக்களும், அரசியல் வாதிகளை வெறுக்கக் கூடிய நிலைமைகளையே மக்கள் மனங்களில் உருவாக்கி விட்டுள்ளது என்பது நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலை அதிக மக்கள் புறக்கணித்ததன் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே அரசியலில் எதுவும் நிகழலாம் அது வியப்புக் குரியதல்ல எனும் நிலைப்பாடு மக்கள் மனங்களிலே நிலைத்து விட்டது இந்த நிலையிலே எக்கட்சி ஆட்சியை செலுத்தினாலும் நிலைமை ஒன்றே என்ற கருத்து நிலவுகிறது. எதிர்க்கட்சிகள் தமது பெரும்பான்மை மூலம் நாட்டுக்குச் செய்யப் போவது என்ன? ஆளும்கட்சியினர் மீது இவர்கள் கூறும் குற்றச் சாட்டுக்களை மீண்டும் இவர்கள் விட மாட்டார்களா? என்ற கேள்வியும் எழவே செய்கிறது. எதுவாகினும் தற்போதைய எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையாக இருந்தாலும், பலம் பொருந்திய சனாதிபதியின் ஆதரவுடன் கூடியதாக இருக்கும் ஆளும் கட்சியை, சிறியதாக இருந்தால்தான் என்ன 113 உறுப்பினர்கள் இருந்தால் தான் என்ன ஆட்சியில் இருந்து அகற்றுவது மிகவும் கடினமானதாகவே இருக்கும் என்பது மட்டும் உண்மை.

# சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை

## - இங்கிலாந்தில் அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

**சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் எண்ணம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை என அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.**

சிறிலங்காவின் சமாதானப் பேச்சுக்கள் மிகவிரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இங்கிலாந்தின் அரச பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

சமாதானம் நோக்கிய பாதையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுதியான நிலைப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவித்துள்ள கதிர்காமர், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இங்கிலாந்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் வியாழக்கிழமை இங்கி லாந்தின் சர்வதேச விவகாரங்களுக்கான அரச பிரதிநிதிகள் இருவருடனான வெவ்வேறு சந்திப்புக்களின் போது இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இங்கிலாந்தின் பாராளுமன்ற அமைச்சர்களுடனான தனது சந்திப்பின்போது லக்ஸ்மன் கதிர்காமர் கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை குறித்துக் கூறியுள்ளார். நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு இங்கிலாந்து அரசு வழங்கியுள்ள 18 மில்லியன் பவுண்ஸ் உதவிக்கும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் தனது நன்றியினைத் தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிக்கான தமது நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் பி.பி.ஸி.யின் உலக சேவைக்கு வழங்கிய செவ்வியொன்றில் குறிப்பிட்டுள்ளார் கருணாவின் விவகாரத்துடன் அரசாங்கத்திற்கு எவ்விதமான தொடர்புகளும் இல்லை எனவும் கூறியுள்ள கதிர்காமர், சமாதான முயற்சிகளை சீர்குலைக்கும் எண்ணம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் தனது செவ்வியின்போது குறிப்பிட்டுள்ளார். லண்டனில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துவரும் கருத்துக்களும் வரவேற்கப்பட வேண்டியவை எனவும் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

# ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் மீது மதுபோதையில் இருந்தவரும் தாக்குதல்

ஜாதிக ஹெல உறுமயவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான உடவத்த நந்தா தேரர் மதுபோதையிலிருந்த ஒருவரினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் பிக்குகள் மீது அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டது போன்று, அதே கீழ்த்தரமான தாக்குதல் பாணியிலேயே மதுபோதையிலிருந்த நபர் தன்னைத் தாக்கியதாக தாக்குதலுக்குள்ளான ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் தெரியவருகின்றது.இதேவேளை, இப்பிக்கு மீது தாக்குதல் நடத்தியவரைத் தாம் கைது செய்துள்ளதாகவும், குற்றவாளி பிக்குவிடம் மன்னிப்புக் கோரியதை அடுத்து கடுமையான எச்சரிக்கையுடன் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் கண்டி பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பௌத்த துறவிகள் படுகொலை தகுந்த நடவடிக்கை வேண்டும்

## ஹெல உறுமய வேண்டுகை

(கொழும்பு)

ஹிங்குராங்கொடவிலும், ஆனமடுவவிலும் பௌத்த துறவிகள் கொல்லப்பட்டமை தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் செய்திருக்க மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ள அவா, இந்தக் கொலைகளுக்குப் பின்னால் அரசியல் சதித் திட்டமொன்று இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அரசியல் கட்சியியொன்றின் ஆதரவாளர்கள் வழங்கிய வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு, ஹிங்குராங்கொட புபுல சிறிபோதிரக்கார விகாரையில் இருந்த சுதஸ்ஸி தேரரை பொலிசார் கைது செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். எனவே, கட்சி பேதங்களைத் தவிர்த்துக் கொண்டு, இந்தக் கொலைகள் தொடர்பான விசார ணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ள எல்லாவல மேதானந்ததேரர், இத்தகைய சம்பவங்களின் மூலம் அரசியல் இலாபம் தேடமுயலும் தரப்பினரைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

### பரீட்சார்த்திகள் கவனத்திற்கு!

எதிர்வரும் 19 ஆம் திகதி திட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ள க.பொ.த உ/த செயல் முறைப் பரீட்சைக்கான பரீட்சார்த்திகளுக்கு கிளி/ அக்கராயன் ம.வி. பரீட்சை நிலையம் என்று குறிப்பிடப்பட்டுள்ள படியால் இப்பரீட்சை நிலையம் கிளி/கிளிநொச்சி ம.விக்கு மாற்றப்பட்டுள்ளதென்பதையும் அனுமதியட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்னர் (சிறிலங்கா அரச நேரப்படி) பரீட்சை ஆரம்பமாகும் என்பதையும் கவனத்திற் கொள்ளுமாறும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார்.

# மனித உயிர்களை வதைக்கும் சட்டங்களை பிக்குகள் அமுலாக்க கோருதல் வருந்தத்தக்கது

## பிரஜைகள் குழு முன்னாள் தலைவர் கண்டனம்

அவசரகாலச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த அரசாங்கத்தை ஹெல உறுமய கோருவது புரிந்துணர்வு உடன்படிக்கையையும் தற்போது நிலவும் சமாதான சூழ் நிலையையும் சீர்குலைக்கவே அது வழி வகுக்கும்.

இவ்வாறு மட்டு. அம்பாறை மாவட்ட பிரஜைகள் குழு முன்னாள் செயலாளர் கதிர்பாரதிதாசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அவசரகாலச் சட்டம் அமு லில் இருந்த காலகட்டத்தில் மனித உரிமைகள் மறுக்கப்பட்டமையும் இதனால் அப்பாவித் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரால் படுகொலை செய்யப்பட்டும் சித்திர வதைக்குள்ளாகியும், கைது செய்யப்பட்டு விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டதை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. பௌத்த தர்மத்தைப் போதிக்கும் பௌத்த துறவிகளைக் கொண்ட ஹெல உறுமய அரசியலில் பிரவேசித்த பின்னர் பௌத்த தர்மத்தைக் கைவிட்டு மனித உயிர்களை வதைக்கும் சட்டங்களை மீண்டும் அமுல்படுத்தக் கோருவது கவலைக்குரியதொன்றாகும். கடந்த காலங்களில் பொறுப்பற்ற பேரினவாத அரசியல்வாதிகளாலும், அரசியல் கட்சிகளினாலும் கொண்டுவரப்பட்ட இத்தகைய சட்டங்களினால் நாட்டின் அமைதி சமாதானம் சீர்குலைவதற்குக் காரணமாக அமைந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# போக்குவரவுக் கழக சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு கருத்தூட்டல்

தமிழீழ காவல்துறையினரால் அண்மையில் புதுக்குடியிருப்பு காவல் பணிமனையில் போக்குவரத்துக் கழகத்தின் வாகனச்சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு சம்பந்தமான கருத்தூட்டல் செயலமர்வு நடைபெற்ற காவல்துறை முல்லை மாவட்ட கண்காணிப்பாளர் தே.கானகன் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் வீதியைப் பயன்படுத்தும் நடைமுறை பற்றியும், விபத்தின்றி வாகனத்தைச் செலுத்துவது பற்றியும் தெளிவு படுத்தப்பட்டது. கருத்துக்களை தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவு கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம் நிகழ்த்தினார். இது போன்ற கருத்தூட்டல் செயலமர்வுகள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

# அபிவிருத்தி ஆராய்வு

வவுனியா தெற்கு வலயக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு தரப்பினரையும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர்.எ ஒஸ் வேல்ட் சந்தித்து ஆராய்ந்து வருகின்றார். முதற் கட்டமாக தமிழ் ம.வி.யில் சந்திப்பு நடைபெற்றது. (10)

# அரச நிர்வாகத் துறையை மீளமைக்கத் தீர்மானம்

## -அமைச்சர் அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

அரச நிர்வாகத் துறையை மீளமைப்பு செய்ய தீர்மானித்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இது குறித்து தேசிய சர்வதேச ரீதியில் சம்பந்தப்பட்ட குழுக்களுடன் பேச்சுவார்த்தையினை நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசஅதிபர்கள் பிரதேச செயலர்களுக்கான மாநாட்டிலேயே பொது நிர்வாக அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதியைக் கொலைசெய்ய முயற்சி இரு இளைஞர்கள் கொழும்பில் கைது!

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகாவைக் கொலைசெய்யச் சூழ்ச்சி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இரண்டு பேரையும் கொழும்பு நீதவான் இம்மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில், சனாதிபதி சந்திரிகா கடந்த வியாழன் முகத்துவாரப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்தவேளை குறிப்பிட்ட சந்தேக நபர்கள் சனாதிபதியினைக் கொலை செய்யத்திட்டமிட்டிருந்தனர் எனவும் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின்படி முதலில் ஒருவர் கைது செய்யப்பட்டுப் பின்னர் தடுத்து வைக்கப்பட்டார் எனவும் தடுத்து வைக்கப்பட்டவர் கொடுத்த தகவலின் பெயரில் மற்றொருவர் கைதுசெய்யப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து பல சயனைட் வில்லைகளை மீட்டுள்ளதாகப் பொலிசார் கூறுகின்றனர்.

# அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க அடுத்த வாரம் சீனா பயணம்

(கொழும்பு)

சிறிலங்காவின் தொழில்துறை, சுற்றுலாத்துறை முதலீட்டு முன்னேற்ற அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க அடுத்த வாரம் சீனாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நேரடிப் பணிப்புரையின் பேரிலேயே இந்த விஜயத்தினை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க மேற்கொள்வதாக அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிகின்றன. தனது விஜயத்தின்போது சீனாவின் சனாதிபதி, வெளிவிவகார அமைச்சர், சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் தொழில்துறை அமைச்சர் உட்பட முக்கிய அரச பிரதிநிதிகளையும் அனுராபண்டார நாயக்க சந்திக்கவுள்ளார். பீஜிங்கில் இம்மாதம் 22ஆம் திகதிமுதல் 28ஆம் திகதிவரை நடைபெறவுள்ள சுற்றுலாத்துறை கண்காட்சி ஒன்றிலும் அமைச்சர் பண்டார நாயக்க கலந்து கொள்வார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# திருமலை நகரில் திருடப்பட்ட ஆட்டோ சாம்பல் தீவில் மீட்பு

## -நால்வர் பொலிசா ால் கைது

(திருமலை)

திருகோணமலை நகரில் கடந்த 13 ஆம் திகதி திருடப்பட்ட ஆட்டோவை திருகோணமலைப் பொலிசார் திருமலை நகரிலிருந்து வடக்கே சாம்பல் தீவுக்கு அருகில் வைத்து கைப்பற்றினர். ஆட்டோவில் இருந்த நான்கு சந்தேக நபர்களையும் பொலிசார் கைது செய்து திருகோணமலை நீதவான் எஸ்.தியாகேந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

லங் லேனைச் சேர்ந்த சந்தேக நப கள் அனைவரையும் பதினா ்கு தினங்கள் விளக்கமறியல் வைக்கும் படி நீதிபதி உத்தரவி டார். திருமலை நகரில் அரசடிச் சந்திக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் முன்னால் நிறுத்தப்பட்ட ஆட்டோவே திருடப்பட்டது. திருகோணமலை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி அமில சமரக்கோன் தலைமையிலான பொலிஸ் குழுவினரே திருடப்பட்ட ஆட்டோவையும் சந்தேக நபர்களையும் கைதுசெய்தனர். (25)

# வவுனியா மாவட்டத்தில் நிகொட் திட்டங்கள்

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் கல்வி நடவடிக்கைக்கு என்று அனுமதிக்கப்பட்ட 21 கருத்திட்டத்திற்கு 70.84 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இருப்பதாக நிகொட் திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியில் இதுவரை 50.67 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சுகாதாரத்திற்காக அனுமதிக்கப்பட்ட 10 கருத்திட்டத் திற்கு என 50.67 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் இதில் இவற்றில் இதுவரை 24.2 மில்லியன் ரூபாவுக்கான வேலை திட்டங்கள் முடிவடைந்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)


## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 07 - 08 - 1972

தாயக மண்ணில் 18 - 07 - 1996

லெப்டினன்ட் வசீகரன்
(இராசையா ஆனந்தரூபன்/ரூபன)
கரணவாய் தெற்கு

முல்லையில் நடந்த அதிரடிச் சமரில்
கொன்று குவித்தனன் கொடியவர் படையை
வென்று வந்தனன் முல்லை மண் பகையை
இன்று நீ இல்லையே எங்களின் அருகிலே
என்று நாம் காண்போம் தமிழீழம் தன்னையே
வென்றே நாம் தீர்வோம்– இது
உங்கள் கல்லறை மீதானையே
கண்டிப்பாய் உங்கள்–பணி
தொடர்வோம் உண்மையே–மண்ணில்
சாவதை விடவும்–மண்ணுக்காய்
சாவது மேல் என்பதை உணர்வோம்
என்றுமே.
இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்,
இல 324. 3ஆம் யூனிற்
யோகபுரம். மல்லாவி.

(4130)

# நெடுந்தீவு அஞ்சலக வளாகத்தில் கடற்படை முகாம் அமைக்க முயற்சி

## பொது அமைப்புக்கள் ஆட்சேபம்

**யாழ். தீவகத்தில் உள்ள நெடுந்தீவு அஞ்சலக வளாகத்தில் புதிய தொரு படைமுகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அண்மைக் காலமாக சிறிலங்கா கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.**

மக்கள் நடமாட்டமுள்ள மேற்படி பிரதேசத்தில் கடற்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்து அதில் நிலைகொள்ள முயற்சித்து வருகின்றமை அப்பகுதியின் இயல்பு நிலையில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய யுத்தநிறுத்த சூழ்நிலையிலும் கடற்படையினர் மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் விதத்தில் புதிய முகாமை அமைக்க முயற்சித்து வருகின்றமை குறித்து கடும் ஆட்சேபம் தெரிவித்து வரும் நெடுந்தீவு பொது அமைப்புகள் இச்செயற்பாட்டை கடற்படையினர் கைவிட வேண்டும் என கோரியுள்ளன.(33)

# இந்திய மீனவர்கள் மீதான நடவடிக்கைகளுக்கு நாம் பொறுப்பாளியாக முடியாது

## -யாழ்.மீனவ சமாச செயலாளர் தெரிவிப்பு

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீன்பிடிப்படகுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அவ்வப்பகுதி மீனவர்களால் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தாம் பொறுப்பாளிகளாக முடியாதென யாழ்.மாவட்ட மீனவ சமாசங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

கொழும்பில் இந்திய-இலங்கை மீனவ சங்கப் பிரதிநிதிகளிடையே எட்டப்பட்ட முடிவிற்கு மாறாக மீண்டும் இந்திய மீன்பிடிப் படகுகள் பெருமளவில் வடமராட்சி மற்றும் நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் உள்ளூர் மீனவர்களது வலைகள் வெட்டப்பட்டும், தொடர்ந்து களவாடப்பட்டும் வருகின்றன.

இது தொடர்பாக பாதுகாப்புத் தரப்பிற்கும், அரச நிர்வாக மட்டத்திற்கும் அறிவிக்கப்பட்டபோதும் எந்தவொரு நடவடிக்கயும் எடுக்கப்பட்டிருக்கவில்லையென சம்மேளனம் குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக யாழ்.நகரிலுள்ள சம்மேளன அலுவலகத்தில் மீனவ சங்கப்பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்தனர்.

இச்சந்திப்பின் பின் அடிப்படையில் உள்ளூர் மீனவர்கள அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீன்பிடிப்படகுகளிலிருந்து தமது உடமைகளைப் பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமது சம்மேளனம் பொறுப்பாளியாக மாட்டாதெனவும், இந்தியப் படகுகள் தாக்கப்பட்டால் பாதுகாப்புத் தரப்பும் அரச நிர்வாகமுமே பொறுப்பெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (27)

## *தீவகத்தில் தீவிரமடைந்துள்ள படையினரின் ரோந்து நடவடிக்கை*

யாழ். தீவகத்திலுள்ள ஊர்காவற்றுறை, வேலணை மற்றும் புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் படையினர் தமது ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.கடந்த சில நாட்களாக இடம் பெற்றுவரும் இந்நடவடிக்கைகளால் அப்பகுதியில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி பகுதிகளிலுள்ள வீதிகளில் திடீர் சோதனைகளையும், அடையாள அட்டை பரிசோதனைகளையும் நடத்திவருகின்றனர். அத்துடன் சிறிலங்கா தேசிய அடையாள அட்டையை வீதிகளில் நடமாடும் போது அனைவரும் வைத்திருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர். (33)

# இ.நி.புலிகளிடம் கையளிக்கப்படும் வரை அரசிற்கு அமெரிக்கா உதவக்கூடாது

## -யாழ்.விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகப்பகுதிகளை நிர்வகிப்பதற்கான இடைக்கால நிர்வாக சபையினைத் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்கும் வரை இலங்கை அரசிற்கான உதவிகளை அமெரிக்கா வழங்கக்கூடாது என யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சிங்களப் பேரினவாதிகளால் அடக்கப்பட்டுவந்த தமிழினம் தமது சுயநிர்ணயஉரிமை கோரிய போராட்டத்தை தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடய தலைமையில் நடத்தி வந்தது..

எனவே தமிழ் மக்களது சுய நிர்ணய உரிமை கோரிய போராட்டத்தின் நியாயத்தன்மைகளை அமெரிக்கா அங்கீகரிப்பதுடன்,

தமிழர் தாயகப் பகுதிகளை நிர்வகிக்கத் தகுதியான புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்குரிய அழுத்தங்களை இலங்கை அரசிற்கு வழங்கவேண்டும்.

புலிகள் மீதான தடையினை அமெரிக்கா நீக்குவதுடன், தமிழ் மக்களது அபிலாசைகளையும் நிறைவேற்ற அமெரிக்கா முன்வர வேண்டும் எனவும் கோரியுள்ள யாழ் .மாவட்ட விவசாய நுகர்வோர் கூட்டுறவுச்சங்கம் இது தொடர்பிலான கடிதம் ஒன்றையும் இலங்கைக்கான அமெரிகக்கத்தூதுவர் ஜெவ்ரிலன் சட்டுக்கு அனுப்பிவைத்துள்ளார். (33)

# கிராமசேவையாளரின் ஒரு தலைப்பட்ச நடவடிக்கை பாதிக்கப்பட்ட மக்கள் பல தரப்புக்கும் மகஜர்

உலக வங்கியின் உதவியுடன் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் கோயிலாக் கண்டி வீடு கட்டும் திட்டத்தில் கட்டப்பட்டு வரும் இருபத்தைந்து வீட்டுத்திட்டத்தில் சரியான நபர்களை தேர்வு செய்வதில் பல குளறுபடிகள் நடந்துள்ளதாக தெரியவருகிறது. போரினால் பாதிக்கப்பட்டு பின்தங்கியுள்ள மக்கள், விதவைகள், வறுமைக் கோட்டுக்குக்கீழுள்ள மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டதாகக் கூறிக்கொண்டாலும், வசதி படைத்தவர்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இதற்கு இப்பிரிவுக்கான கிராம அலுவலர், ஜே. 296, மற்றும் கிராமிய புனரமைப்பு குழு போன்றவற்றின் ஆதரவு உண்டென மக்கள் தெரிவிக்கின்றனர். செ.சரவண பவானி என்ற விதவைப் பெண் ணும், இன்னும் மூன்று வறுமைக் கோட்டுக்குள் வாழ்கின்ற குடும்பங்களும், முதலில் இவ் வீட்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டு பின்னர் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இந்த வீடுகள் நல்ல வசதி படைத்த சிலருக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. முறைகேடான இச்செயல் குறித்து இப்பகுதியின் சமுதாயஆர்வலர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில், கிராம சேவையாளரின் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையைக்கண்டித்து சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தின் கவனத்திற்கும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும், யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், கொழும்பு பொது நிர்வாக உள்நாட்டு செயலாளருக்கும், தமிழீழ அரசியல் துறையின் கவனத்திற்கும் மகஜர்களை அனுப்பியுள்ளனர். இது குறித்து உடன்நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் துயர் துடைக்க வேண்டப்பட்டுள்ளது.

# செயலமர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த விஞ்ஞான பாட சேவை ஆசிரியர்களுக்கான விசேடசெயலமர்வு ஒன்று இடம் பெறவுள்ளது.

இன்று காலை சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ள இச்செயலமர்வில சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# காரைநகரில் தீவிரமடையும் நெருப்புக்காய்ச்சல் கடந்த ஒரு மாத காலத்தில் 115 பேர் பாதிப்பு

யாழ். தீவகத்தில் உள்ள காரைநகர்ப்பிரதேசத்தில் நெருப்புக்காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருவதாக காரைநகர் வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் காரைநகர் பிரதேசத்தில் கடந்த ஒரு மாத காலத்துள் 115 பேர் நெருப்புக்காய்ச்சல்நோய்த் தாக்கத்திற்கு இலக்காகியிருப்பதாக வைத்தியசாலைக் கணக்கெடுப்புக்கள் தெரிவித்தன.

மேற்படி பிரதேசத்தில் உரிய முறையில் சுகாதார நிலைமைகள் பேணப்படாமையினாலேயே இந்நோய் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(33)


# இயல விற்பனை

உந்துருளிகள் இயங்கும் நிலை, உதிரிகளாக்கும் நிலை, ஈருருளிகள் இயங்கும் நிலை. பார்வையிடும் காலம் 17.07.2004, 18.07.2004, 19.07.2004.

* இயலம் நடைபெறும் நாள் 20.07.2004 காலை 10.00 மணி

* இடம்:- உடைமைப் பகுதிச் செயலகம் வேணாவில் புதுக்குடியிருப்பு.

உந்துருளிக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 200ரூபா

(சி-9146)



# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மலர்வு 20 08 1951



உதிர்வு 18 06 2004

அமரர்

**செல்லப்பா மகேந்திரன்**

(அன்பு வெதுப்பக உரிமையாளர்)

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த
எம் அப்பாவே ஆதரவு மொழி பேசி பாசத்தோடு
உணவூட்டி பகல் இரவு பாராது அரவணைத்தீரே
எம் விழிகளை நனைத்தே நிம்மதியாய் சென்று விட்டீர்
நாம் இன்று கண்களில் நீர் வடிந்து நிற்கின்றோம்

எம் இல்லத்தில் இன்று 18.07.2004 நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:-
பெறாமகன்
க.இந்திரன்

ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. (4644)



# 31ம் நாள் நினைவு கூருகிறோம்

மலர்வு 1934 – 06 – 08



உதிர்வு 2004 – 06 – 18

அமரர்

**ஆறுமுகம் – இராசேந்திரம்**

உண்ணாப்பிலவு, முல்லைத்தீவு

அன்பின் உருவமாய்
ஆற்றலில் வல்லோனாய்
நிறுவனத்தின் ஆணிவேராய்
நிலை கொண்ட
மூத்த உறுப்பினரான தங்களின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் பிரார்த்திக்கிறோம்

பணிப்பாளர்கள்
பணியாளர்கள், அங்கத்தவர்கள்
முல்லை கிழக்கு
ப. தெ. வ. அ. கூ. சங்கம்
முல்லைத்தீவு.

வண்ணாங்குளம்
முல்லைத்தீவு.

(சி-9147)

# ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடர்

## பாகிஸ்தான்,சிறிலங்கா அணிகளுக்கு வெற்றி



சிறிலங்காவில் நடைபெற்று வரும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் நாளான நேற்று நடைபெற்ற குழு 'ஏ' போட்டி ஒன்றில் பாகிஸ்தான் அணி பங்களாதேஷ் அணியை 76 ஓட்டங்களால் தோற்கடித்துள்ளது.எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் காசிர் கமீட் 102 ஓட்டங்களையும், இன்சமாம் உல்-ஹக் 58 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப்பெற்றனர்.

பந்து வீச்சில் பங்களாதேஷ் அணியைச் சேர்ந்த அப்துல்ரசாக் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பங்களாதேஷ் அணி 45.2 பந்துகளில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்று 76 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

பந்து வீச்சில் அக்தார் 3விக்கெட்டுக்களையும் முகமடசமி 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

குழு 'பி'க்கான மற்றுமொரு போட்டியில் சிறி லங்கா ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின. தம்புள்ள மைதானத்தில் இரவு பகலாக நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி 239 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அவிஸ்க குணவர்த்தன 73 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார்.பந்து வீச்சில் குரான் ஹான்32 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி ஆடிய எமிரேட்ஸ்47.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 123 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியடைந்தது. பந்து வீச்சில் உபுல் சந்தன 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



### தென்கொரியா பயணம்

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி கால்பந்து அணி தென்கொரியாவின் தலைநகர் சியோலில் எதிர்வரும் 22ஆம் திகதி நடை பெறும் சமாதானத் திற் கான கால்பந்துப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இன்று தென் கொரியா பயணமாகிறது. (மி)

## ஆசியக் கோப்பைத் துளிகள்



பாகிஸ்தானில் நடைபெற்ற தொடருக்குப் பின்னர் ஏறக்குறைய 3 மாத இடைவெளிக்குப் பிறகு இந்திய அணி விளையாடிய முதல் போட்டி இதுவாகும்.

கடந்த மாதம் கோலாலம்பூரில் நடைபெற்ற ஏ.சி.சி (ஆசிய கிரிக்கெட் கவுன்சில்) டிராபி போட்டியில் வெற்றி பெற்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியில் நேற்றைய போட்டியில் விளையாடிய 11 வீரர்களும் தங்களது சர்வதேச அறிமுகத்தைத் துவக்கினர்.

முதல் 20 ஓவர்களில் இந்திய அணியின் ஓட்டவிகிதம் 3.5 ஆக இருந்தது.

இந்தப் போட்டியில் ராவிட் அடித்த சதமானது ஒரு நாள் போட்டியில் அவரது 9ஆவது சதமாகும்.

கடந்த 20 மாதங்களில் ராவிட் விளையாடியுள்ள 44 போட்டிகளில் அவர் அடிக்கும் முதல் சதம் இதுவாகும்.

2002இல் நவம்பரில் நடைபெற்ற மே.இ.தீவுகளுக்கு எதிரான போட்டியில் 109 ஓட்டங்களை எடுத்திருந்ததே ஒருநாள் போட்டிகளில் ராவிட் எடுத்த கடைசி சதமாகும்.

ஆசிய கோப்பைப் போட்டியில் இந்திய அணியின் சிறந்த ஓட்டம் இந்தப் போட்டியில் எடுத்ததாகும்.

தம்புள்ள மைதானத்தில் ஆஸி.வீரர் ஹெய்டன் 93 ஓட்டங்களை எடுத்திருந்ததே முந்தைய சிறப்பம்சமாகும். இந்த சாதனையை ராவிட் முறியடித்தார்.

ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற முதல் போட்டியில் பங்களாதேஷ் அணி 116 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹொங்கொங் அணியை வீழ்த்தியது.

## பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ள 'கோபா' அமெரிக்க கால்பந்துப்போட்டி

கோபா அமெரிக்க கால் பந்துப் போட்டியில் பராகுவே அணிக்கு எதிரான போட்டியில் பிரேசில் 2-1 என்ற கோல் கணக்கில் தோற்றதன் மூலம் காலிறுதிப் போட்டிகள் பரபரப்பான நிலையை எட்டியுள்ளது.நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் பெரு, ஆர்ஜன்டீனா அணிகள் கலந்துகொண்டன. மற்றொரு போட்டியில் கொலம்பியாவும்,கோஸ்டாரிகாவும் கலந்துகொண்டன.கோபா, அமெரிக்கா கால்பந்துப் போட்டியில் கொலம்பியா நடப்பு சாம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது இன்று நடைபெறுகின்ற காலிறுதிப்போட்டியில் பராகுவேயும், உருகுவேயும் மோதுகின்றன. மற்றொரு போட்டியில் பிரேசிலும் மெக்சிகோவும் மோதுகின்றன.

சிலி அணிக்கு எதிராகக் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கோபா, அமெரிக்க கால்பந்துப் போட்டியில் காலிறுதியில் விளையாட கோஸ்டாரிகா தகுதிபெற்றது.

பராகுவே அணிக்கு எதிரான போட்டியில் தோல்வியுற்றாலும், இனிவரும் போடடிகளில் வெற்றி பெறத் தயாராக இருப்பதாக பிரேசில் அணியின் பயிற்சியாளர் கூறியுள்ளார். 1979 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள கோபா அமெரிக்க கால்பந்துப் போட்டிகளில் இந்தமுறை நடைபெற்ற போட்டியில்தான் முதன் முறையாகப் பராகுவேயிடம் பிரேசில் தோற்றுள்ளது. "நல்ல வேளைக்கு இந்தத் தோல்வியானது இறுதிப் போட்டிக்கு முன்னேறும் எங்களுடைய திட்டத் திற்குத் தடையாக அமையவில்லை. இது எங்களுக்கு எச்சரிக்கை மணி ஆகும் பராகுவே அணிக்கு எதிரான போட்டியில் செய்த தவறுகளை மீண்டும் செய்யமாட் டோம்" என்று பிரேசில் பயிற்சியாளர் அல்பர்டோ பெர்ரேரா கூறியுள்ளார்.

### தமிழீழ விளையாட்டுத்துறை நடாத்தும் மேஜர் முரளி ஞாபகார்த்த

# இளையோர் கால்பந்துச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி, இறுதியாட்டங்கள் இன்று

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்படும் மேஜர் முரளி நினைவாக இரண்டாவது தமிழீழத் தேசிய இளையோர் உதைபந்தாட் டச் சுற்றுப்போட்டி 17.07.2004 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் கோலாகலமாக ஆரம்பமாகியது

கிளி.பொது விளையாட்டு மைதானம்,கிளி. மகாவித்தியாலய மைதானம் ஆகிய இரு மைதானங்களில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் தமிழர் தாயகத்தின் அணிகளோடு கடந்த வருடத்தைப் போல சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த அணியும் கலந்து கொண்டது.

கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா தலைமையில் நடைபெற்ற தொடக்க நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியினை மட்டு, அம்பாறை சிறப்புத்தளபதி கேணல்.ரமேஸ் ஏற்றி வைத்தார். மேஜர் முரளியின் உருவப்படத் திற்கு மாவீரர் கப்டன் கெனடியின் தந்தையும், இளையோர் செயற் பாட்டு நிறுவனத்தின் தலைவரு மான ம. பத்மநாதன், மட்டு, அம் பாறை அரசியல்துறைப் பொறுப்பா ளர் கௌசல்யன் ஆகியோர் மலர் மாலை சூட்டினர். ஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா புலிகளின் குரல் பொறுப்பாளர் நா. தமிழன்பன் ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது. நடுவர்கள் சார்பில் ஜோயல் பியசீலன். வீரர்கள் சார்பில் அன்ரன் நிரோஜன் ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்தனர்.



தொடர்ந்து நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் மன்னார் அணி 3-0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி அணியை வென்றது. J.லூயிஸ் அல்போன்ஸ் இரு கோல்களையும், நியூட்டன் ஒரு கோலையும் (தண்ட உதை) போட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் 3-1என்ற கோல் கணக்கில் (சமநிலை உடைப்பு) திருமலை அணி கிளி.அணியை வென்றது.

தொடர்ந்து நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் யாழ். அணிவீரர் க.சுதர்சன் கோல்போட்டு மன்னார் அணியை 1-0 என்ற கோல்கணக்கில் தனது அணி வெற்றி பெற வழிசமைத்தார்.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக ஜனாப்கற்றிம்கி, பைசா், திருவாளர்கள் s.கருணானந்தன், A.அருளானந்த ஜோதி,Y.ரஜனி காந், k.கலாதரன், கிறிஸ்ரி ஆகியோர் கடமையாற்றினர்.

கிளி.ம.வி. மைதானத்தில் நடைபெற்ற லீக் முறையிலான 14 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் யாழ். அணி வீரர் ச.சதீஸ்வரன் கோல்போட்டு மன்னார் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் தனது அணியை வெற்றி பெறவைத்தார்.

அடுத்து நடைபெற்ற கிளிநொச்சி. திருமலை அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு






அணிகளும் கோல் எதுவும் போடாததால் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. அடுத்து நடைபெற்ற போட்டியில் யாழ் வீரர் நி. ஜெரோன் கோல்போட்டு முல்லை. அணியை 1-0 என்ற கோல்கணக்கில் தனது அணியை வெற்றி பெறவைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சுவிஸ் அணி வீரர்கள் ம. சிந்தூஸ்கர்,சி.சுகந்தன் தலா இரு கோல்போட்டு மன்னார் அணியை 4-0 என்ற கோல் கணக்கில் தமது அணியை வெற்றிபெற வைத்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற அம்பாறை-திருமலை அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் போடாததால் போட்டி சமநிலையில் முடிவுற்றது.




இப்போட்டிகளுக்கு நடுவர்களாக திருவாளர்கள் A.S குணரட்ணம், ஆர்னோல்ட், ஜீவராஜா, சசிவர்ணன். ரங்கன், சிவலிங்கம் ஆகியோர் கடமையாற்றி னர். பிற்பகல் நடைபெற்ற அம்பாறை- கிளி அணிகளிற்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் போடாததால் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சுவிஸ் அணி வீரர்கள் ம.சிந்தூஸ்கர், கி.சுகந்தன், த.தேவன் ஆகியோர் தலா ஒரு கோல்போட்டு 3-0 என்ற கோல் கணக்கில் முல்லை. அணியை வெற்றி கொண்டனர். முல்லை , மன்னார் அணிகளிடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் போடாததால் போட்டி சமநிலையில் நிறைவு கண்டது.

இப்போட்டிகளின் முடிவில் யாழ் சுவிஸ் அணிகள் அரையிறுதிக்குத் தெரிவாகின. அம்பாறை, கிளி, திருமலைஅணிகள் சமநிலையில் இருந்ததால் சம நிலை உடைப்பின் மூலம் அரையி றுதிக்கு பங்குபற்றும் அணிகள் தெரிவாகின. இதன் மூலம் சுவிஸ் அணிக்கு எதிராக விளையாட அம்பாறை அணியும், யாழ். அணிக்கு எதிராக விளையாட கிளிநொச்சி அணியும் தெரிவாகின. இவ்விரு அரையிறுதிப் போட்டிகளும் இன்று காலை நடைபெறும். இதில் வெற்றிபெறும் அணிகள் பிற்பகல் நடைபெறும் இறுதிப்போட்டியில் மோதவுள்ளன. 19 வயதுக்குட்பட்டோருக்கான அரையிறுதிப்போட்டியில் திருமலை அணி 3-1 என்ற கோல் கணக்கில் மன்னார் அணியை வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டது. திருமலை அணியின் சார்பில் பி.கபில்தேவ் இரு கோல்களை யும் றெ.கிஷோக்குமார் ஒருகோலை யும், மன்னார் அணியின் சார்பில் யு.ரஜீவ் ராஜ் ஒருகோலையும் போட்டனர். தொடர்சசியாக நடைபெற்ற 17 வயதிற்குட்பட்டோருக்கான அரையிறுதிப் போட்டியில் அம் பாறை அணி 2-0 என்ற கோல் கணக்கில் திருமலை அணியை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. T.L.ஷிகான், m.கிரூான் ஆகியோர் கோல் போட்டனர். (லோ)

## சிந்தனைக்கு



சத்தியத்திற்காகச் சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 18-07-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## மீண்டும் ஒரு போருக்கு....!

“விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தி மீண்டும் போரை ஆரம்பிக்கும் திட்டத்தின் அடிப்படையில் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது” என்ற அனைத்துலகப் போர் திறனாய்வு முன்னறிவிப்பு மையமான ஸ்ரற்ஃபோர் நிறுவனத்தின் மதிப்பீடு குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

ஏனெனில் சிறிலங்கா அரசாங்கத்தின் செயற்பாடுகள் போரை நோக்கியது என்பதற்கான ஆதாரங்கள் நிரம்பவே உண்டு. சமாதானப் பேச்சுவார்த்தைகளும் அவை தொடர்பான அறிவிப்புக்களும் போர் தயாரிப்பிற்கான கால அவகாசமே ஒழிய சமாதான முயற்சிகளில் உள்ள இடையூறுகளைப் போக்குவதற்கானவையல்ல.

சிறிலங்கா இராணுவத் தரப்பும் யுத்தத்திற்கு தான் தயார் நிலையில் உள்ளதை தற்பொழுது வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது. புதிய இராணுவத் தளபதியான லெப்.ஜெனரல்சாந்தகொட்டேகொட, தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தம் ஒன்றை ஆரம்பித்தால் அதற்கு முகம்கொடுக்க இராணுவம் தயாராக உள்ளதெனத் தெரிவித்துள்ள அதேவேளை, யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ள இராணுவத்திற்கும், கடற்படைக்கும் நவீன ஆயுதப்பயிற்சிகள் வழங்கப்பட்டுவருவதாக இராணுவத்தளபதியும், கடற்படைத் தளபதியும் கூட்டாகத் தெரிவித்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

கடந்த சமாதான காலத்தைச் சிறிலங்கா அரசு தனது ஆயுதப் படைத்தரப்பைப் பல்வேறு வழிகளிலும் பலப்படுத்துவதில் முற்பட்டிருந்தது என்பது வெளிப்படையாகவே தெரிந்தவொன்று. ஆனால், இதுவொரு சமாதானத்திற்கு எதிரான, யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான செயற்பாடு என்பது பொருட்படுத்தப்பட்டதொன்றாக இருக்கவில்லை.

சிறிலங்கா அரசு சமாதானப் பேச்சுவார்த்தை காலத்தில் பலதரப்புடனும் பாதுகாப்பு உடன்பாடுகளைச் செய்து கொள்வதிலும், இராணுவ ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்வதிலும் தீவிரம் காட்டியிருந்தது. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்றவற்றுடன் இந் நெருக்கமானது அதிகமாக இருந்தது.

இதன் பிரதியுபகாரமாக அமெரிக்கா குறைந்தவிலையில் ஆயுதக்கொள்வனவு செய்யும் ஒரு சலுகை நாட்டிற்கான அந்தஸ்தினை சிறிலங்காவுக்கு வழங்கியது. அத்தோடு ஒரு கடல்ரோந்துக்கப்பலையும் வழங்கியதோடு அமெரிக்க கிழக்கு பசுபிக் பிராந்தியத்தில் கடற்படைத் தலைமையகத்துடன் நெருக்கமான உறவை வைத்துக்கொள்ளும் வாய்ப்பையும் கொடுத்துள்ளது.

இதேவேளை இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்வதில் சிறிலங்கா அரசு பெரிதும் முனைப்புக்காட்டியது. இந்தியாவில் திடீரெனப் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டால் இவ் உடன்பாடு தாமதமானது ஆயினும் அதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது பூரணமான நிலையை எட்டும் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தவகையில் சிறிலங்கா அரசு தனது இராணுவ பலத்தை அதிகரித்து வந்ததோடு புலிகளுக்கு எதிரான பாதுகாப்பு வலைப்பின்னல் ஒன்றையும் உருவாக்கும் தீவிர முயற்சியிலும் ஈடுபட்டு வந்தது. ஆனால் இது சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கை என்பது போன்றே யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறானது என்பதை சிறிலங்கா அரசோ அன்றி சமாதானப் பேச்சுவார்த்தையில் தமது அக்கறையை வெளிப்படுத்தி வரும் நாடுகளோ கண்டுகொள்ளவில்லை.

இதற்கும் அப்பால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் பொருட்படுத்தியதாக இல்லை. கடந்த சிறிலங்கா அரசாங்கத்திற்கும்- விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்தவேளை உயர்பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் வெளியேறினால் அது இராணுவ வலுச் சமநிலையைப் பாதிக்கும் எனக் கூறிய இராணுவத் தரப்பின் நிலைப்பாட்டிற்கு அனுசரணையாகப் பேசிய கண்காணிப்புக்குழு கூட இது குறித்துக் கவலையெதுவும் கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் தற்பொழுது சிறிலங்கா அரசாங்கம் மீண்டும் ஒரு போருக்கு தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டுள்ளது. விடுதலைப்புலிகள் மீது பழியைப்போட்டு எப்பொழுது போரை ஆரம்பிப்பதற்கான அரசியற் சூழ்நிலை உருவாகும் என்பதையே இராணுவம் தற்பொழுது எதிர்பார்த்துள்ளது. என்பதே இன்றைய யதார்த்த நிலையாகும். இதனையாரும் நிராகரிக்க முயன்றால் சிறிலங்கா அரசியலை அவர்கள் சரியாக மதிப்பீடு செய்யமுடியாதவர்களாகவே இருக்க முடியும்.

### சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக

# திருமலை அன்பு இல்லத்தின் நிர்வாகம் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்திடம்

ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்து வந்த திருகோணமலை நகரின் மத்தியில் இயங்கிவரும் “அன்புஇல்லம்” நிறுவனத்தின் நிர்வாகம் திருகோணமலை நீதிபதி எஸ்.தியாகேந்திரனின் உத்தரவின் பேரில்சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப் பட்டுள்ளது.

‘அன்பு இல்லம்’ நிறுவனத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் முறை கேடுகள் இடம் பெற்றுள்ளதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டதாக திருகோணமலை பொலிஸ் அதிபர் தயா சமரவீர நேற்று சனிக்கிழமை காலை ‘அன்பு இல்லம்’கட்டடத்தில் வைத்து நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரி வித்தார்.

‘அன்பு இல்லம்’ நிறுவனத்தை நடத்திவந்த சங்கரப்பிள்ளை சுந்தரலிங்கம் மற்றும் ஒரு பெண் உதவியாளர் கோமளாதேவி ஆகியோரைக் கைதுசெய்யும் உத்தரவைத் திருகோணமலை நீதவான் எஸ்.தியாகேந்திரன் கடந்த புதன்கிழமை பிறப்பித்திருந்தார். பெண் உதவியாளர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டதாகவும் சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் இரவு சட்டத் தரணி ஊடாக பொலிசில் சரண டைந்தார் என்றும் பொலிஸ் அதிபர் தயா சமரவீர செய்தியாளர் களிடம் தெரிவித்தார்.

‘அன்பு இல்லம்’ அமைப்பில் இடம் பெற்று வந்ததாகக் கூறப்படும் முறை கேடுகள் வெளியான விதம் பற்றியும் பொலிஸ் அதிபர் தயாசமரவீர செய்தியாளர்களிடம் விவரித்தார்.

செய்தியாளர் சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண சிறுவர் பராமரிப்புத் திணைத் தலைமைக் காரியாலயச் சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை அதிகாரி பி.ரவிச்சந்திரன், திருமலை மாவட்ட சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை அதிகாரி வி.கந்தசாமி, சிறுவர் உரிமை அபிவிருத்தி அதிகாரி சி.சக்திநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

“வடக்கு கிழக்கு மாகாணத்தில் 158 சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் செயற்படுகின்றன. இவற்றில் 50 இல்லங்களே மாகாண சமூக சேவைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் 18 சிறுவர் இல்லங்கள் செயற் படுகின்றன. இவற்றில் மூன்று இல் லங்கள் மாகாண சமூக சேவைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வில்லை. பதிவு செய்யபபடாத அம் மூன்று இல்லங்களில் “அன்பு இல்லம்” ஒன்று என்று தெரிவித்தார் மாவட்ட சிறுவர் பராமரிப்பு அதி காரி கந்தசாமி. (25)

# சிறைச்சாலை அதிகாரி யாருக்காயினும் ஆயுதக் குழுக்களுடன் தொடர்புள்ளதா?

### ஆராய்வதாக நீதியமைச்சர் தெரிவிப்பு

சிறைச்சாலை அதிகாரிகள் யாராயினும் ஆயுதக்குழுக்களுடன் தொடர்பு வைத்துள்ளார்களா? என்பது குறித்து ஆராய்வதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தற் போது விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு சிறைச சாலையில் கடந்த வியாழக்கிழமை கைதி ஒருவர் இரண்டு கைதிகளை சுட்டுக்கொன்றதைத் தொடர்ந்து இது தொடர்பாக ஆராய்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரி விக்கையில்,

இவர்களுக்கு ஏதோ ஒரு முறையில் ஆயுதங்கள் கிடைத் தால் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் நடக்கலாம். எமது அதிகாரிகள் யாராயினும் கைதிகளுக்கு ஆயுதம் கிடைக்க உதவியிருந்தார்களா? இல்லையாயின் எவ்வாறு சிறையிலிருந்த கைதிக்கு ஆயுதம் கிடைத்தது? என்பது குறித்து விசேட விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் பாத்துக் கொள்ள வேண்டும். இது தொடர்பாக விசேட கவனம் செலுத்த எண்ணியுள்ளேன் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஆசிரிய இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கக் கோரல்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 2005ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் இடமாற்றங்களை மேற் கொள்வதற்கு மாகாணக் கல்வித் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதனடிப் படையில் மாவட்ட மட்டம் மற்றும் மாகாணங்களுக் கிடையிலான இடமாற்றங்கள் கோரும் விண்ணப்பங்களை ஆசிரியர்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் ஊடாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு மாகாணக்கல்விப்பணிப் பாளர் இ.விசாகலிங்கம் கேட் டுள்ளார்.

இதேவேளை வலயத்திற்குட் பட்ட இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னரும், வலயங்களுக்கிடையிலான விண்ணப்பங்கள் ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

மேற்படி இடமாற்றத் திட்டத்தின் பிரகாரம் குறித்த ஒரு வலயத்திற் குட்பட்டதாகவும், இரு வெவ்வேறு வலயங்களுக்குஇடையிலும், மாவட்டங்களுக்குஇடையிலும், மாகாணங்களுக்குகிடையிலும் நான்கு வகையான இடமாற்றங்கள் ஆசிரியக்களுக்கு வழங்கப் படவுள்ளன.

கஷ்ரப் பிரதேச பாடசாலைகளில் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் கடமையாற்றிய ஆசிரியர்களும் வசதியான இடத்தில் தொடச்சியாக ஆறு வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களும், வடக்கு -கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் கணவன் அல்லது மனைவி ஆகியோரும் இடமாற்றம்கோரத் தகுதியுடையவர்களாவர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை 53 வயதைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், அவர்களது விருப்பத்திற்கு மாறாக இடமாற்றம் வழங்கப்படக் கூடாது என்றும் வலயக்கல்விப் பணிப் பாளர்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.

மேற்படி இடமாற்றங்கள் எதிர் வரும் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற் படும் வண்ணம் மேற்கொள்ளப் படுமென்று மாகாணக்கல்விப்பணிப் பாளர் சுற்று நிருபத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

## எலும்புக் கூடு கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பலாங்கொடப் பகுதியில் மனித எலும்புக் கூடு ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

பலாங்கொட ‘ரஜவக்க’ காட்டுப் பகுதியில் நீரோடை ஒன்றின் அருகே காணப்பட்ட இந்த எலும்புக் கூட்டினை பலாங் கொட பொலிசாரும், திடீர் மரண விசாரணை அதிகாரியும் பார்வையிட்ட பின் இது நீதிமன்ற விசாரணைகளுக்காக கரபிற்றிய போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

பலாங்கொட பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.தே.க. செயலாளர் நாயகமாக என்.டி.கே வேரகொட தெரிவு

ஐக்கிய தேசியக் கட்சியின் புதியசெயலாளர் நாயகமாக எண்டிகே. வேரகொட தெரிவு செய்யப பட்டுள்ளார். கடந்த 15ஆம் திகதி இத்தெரிவு இடம்பெற்றுள்ளது..

முன்னைய செயலாளர் நாயகம் மில்ரோய் பர்னாந்து செயலாளர் பதவியில் இருந்து விலகியதால் வேரகொட இப்புதிய பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.என கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மற்றும் கட்சியை மறுசீரமைப்பதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் தேர்தல் மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் அபிப்பிராயங்களையும் பெற்றுக் கொள்வதற்கு இக்குழு தீர்மானம் எடுத்துள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் புதிய தலைவராக என்.ஜீ.பி. பண்டிதரத்ன தெரிவாகி உள்ளார்.

## புதியநியமனம்

1500 தபால் ஊழியர்களையும், 611 உப தபால் அதிபர்களையும் புதிதாக தபால்திணைக்களத்திற்கு சேர்த்துக்கொள்ள இருப்பதாக தபால்தொலைத் தொடர்புகள் அமைச்சர் தி.மு.ஜயரத்தின தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தபால் ஊழியர்களுக்கான சொத்தழிவுக் கடன் திட்டங்கள் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளதென்று தெரிவித்துள்ளதுடன், 14 தொழிற் சங்கங்கள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

# இ.தொ.கா.வின் ஆதரவுடன் பெரும்பான்மையை நிரூபிப்போம்

## அமைச்சர் தி.மு. ஜயரத்தின தெரிவிப்பு

இம் மாதம் 20 ஆம்திகதிபாராளு மன்றம் கூடும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங் கத்துடன் இணையப் போகிறது. அதன் ஆதரவுடன் 115 பாராளு மன்ற அங்கத்தவர்களின் ஆதரவும் எமக்கு கிடைக்கும். நிச்சயமாக பாராளுமன்றத்தில் பெரும்பான் மையை நிரூபிப்போம் என தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் தி.மு.ஜயரத்தின தெரிவித்துள்ளார். மாகாண சபைத் தேர்தலில் மக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணிக்கு வாக்களித்துள்ள படியால் ஐக்கிய தேசிய முன்ன ணிக்கு பாராளுமன்றத்தில் பெரும் பான்மை பலம் கிடையாதென அமைச்சர் தெரிவித்துள்ளார். நாட்டின் சிறுபான்மை மக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் பொழுது எதிர்க் கட்சியினர் அரசு டன் இணைந்து செயற்பட வேண் டும் என அவர்மேலும் கூறியுள்ளார்

# இ.தொ.கா. தலைவர் தொண்டமான் ஹொங்கொங்கிற்கு திடீர் விஜயம்

**20ஆம் திகதி பாராளுமன்றம் வருவாரா? எனக் கேள்வி**

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் திடீரென இம் மாதம் ஹொங்கொங் நாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். சொந்தக் காரணங்களுக்கு அவர் சென்றுள்ளார் என்றும், 20ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் பொழுது அவர் அன்றைய கூட்டத்திற்கு சமூகமளிப்பாரா இல்லையா என்று சரிவரக் கூற முடியாதென்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# யாழ். மாவட்ட அரசியல் துறையினர் தமிழ்க் கூட்டமைப்பினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்கும் தமிழ்க் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பின ருக்கும் இடையேயான மாதாந்த சந்திப்பு நேற்றுக் காலை 11 மணி யளவில் யாழ். மாவட்ட அரசியல் துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இதில் தமிழ்க் கூட்டடைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், மாவை சேனாதிராசா, சிவனேசன்,ரவிராஜ்,பத்மினி சிதம் பரநாதன், ஈழவேந்தன் ஆகி யோரும் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பருதி யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப் பாளர்ஆகியோரும் கலந்து கொண் டனர்.இச்சந்திப்பில் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களது பிரச்சினைக்கு அரசாங்க அதிபர் ஊடாகத்தீர்வு காணுதல், பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத் தின் ஊடாக பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை பொது அமைப்புக்க ளாலும் அரசியல்துறையாலும் இனங்காணப்படும் பொதுத் திட்டங்களுக்கு பயன்படுத்துதல்,

உலக வங்கியால் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கென வழங் கப்படும் நிதியை இலங்கை அர சுக்கு வழங்காமல் நேரடியாக வடக்கு கிழக்கில் பயன்படுத்துதல் போன்ற விடயங்கள் ஆராயப் பட்டன. (36)

# மூதூரில் சுட்டுக்கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி செலுத்தி கடையடைப்பு

திருகோணமலை மூதூர் ஷாபி நகரில் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதவர்கள் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டுபேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து நேற்று இவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலை யங்கள் மூடப்பட்டிருந்ததுடன் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப் பட்டுள்ளன.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக மூதூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். இதற்கமைய இரண்டு முஸ்லிம் குழுக்களிடையே ஏற் பட்டமுறுகல்களின் விளைவாகவே இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமெனச் சந் தேகிக்கப்படுவதாகத் தெரிவித் துள்ளனர்.

மூதூர் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணி யளவில் இரு முஸ்லிம் வியா பாரிகள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று மூதூர் பொலிசார் தெரிவித்தனர். சாதிக், பாஹிம் என்பவர்களே உயிரிழந்தவர்களாவர் என்றும் பொலிசார் கூறினர். ஷாபிநகர் நோக்கி வந்துகொண்டிருந்த போதே இவர்கள் துப்பாக்கிச் சூட் டுக்குள்ளானார்கள் என்றும் சம்பவம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்றதாக வும் பொலிசார் தெரிவித்தனர். சம்ப வத்தை அடுத்து பொலிசார் பிரதே சத்தின் பாதுகாப்பைப் பலப்படுத் தியுள்ளனர். (25)

# “தாய்மடியில் தாலாட்டு” ஒலிப்பேழை வெளியிட ஏற்பாடு

வவுனியா விடியல் இசைக் குழுவின் “தாய் மடியில் தாலாட்டு” என்ற ஒலிப்பேழை வெளியீட்டு விழாவினை வவுனியா அரசியல் துறையினர் சிறப்பாக நடாத்துவ தற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர். இந்த நிகழ்வு வவுனியா றம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயத் தில் எதிர்வரும் 24 ஆம் திகதி மாலை 4.00மணிக்கு இடம் பெற வுள்ளது. முற்று முழுதாக இளம் கலைஞர்களைக் கொண்டு இந்த இசைத்தட்டு உருவாக்கப்பட்டிருப் பதாக தெரிவிக்கப்படுகின்றது. (21)

# உலகவங்கி அபிவிருத்தி அறிக்கை தமிழ்ப் பிரதி வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

உலக வங்கியின் உலக அபி விருத்தி அறிக்கை 2004 இன் தமிழ்ப்பிரதி வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

இந்நிகழ்வு நளை காலை 10.00 மணிக்கு திட்டமிடலுக்கும் மேம் பாட்டுக்குமான செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இதில் உலக வங்கியின் தெற்காசியாவுக்கான பிரதம பொருளியலாளர் டாக்டர். சந்தயாணன் தேவராஜன், உலக வங்கியின் இலங்கைக்கான முதன்மைப் பொருளியலாளர் செல்வி றிக்கோ கஸ்ரோ உலக வங்கியின் இலங்கைக்கான பிரதி நிதி பீற்றர் கரல்ட் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## எழுத்துப் போட்டி பிற்போடல்

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற ஒழுங்குசெய்யப்பட் டிருந்த வலய மட்ட சமூகக்கல்வி எழுத்துப்போட்டி அன்றைய தினம் நடைபெறமாட்டாது எனவும், நடை பெறும் திகதி பின்னர் அறிவிக் கப்படும் எனவும் வலயக்கல்விப் பணிப்பாளர்அறியத்தருகிறார்.

## பரீட்சைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழி நுட்பக் கல்வி நிறுவனத்தின் தேசிய கைத்தொழில் பயிலு னர்களிற்கான தேசிய கைத் தொழில் தரச்சான்றிதழ் பரீட் சைகள் எதிர்வரும் 24,26,27, 28,29,30 ஆகிய திகதிகளில் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவன மண்டபத்தில் நடைபெறுமென கல்லூரி முதல் வர் தி. பிரபாகரன் அறியத்தந் துள்ளார். (15)

# கல்முனை சவளக் கடையில் விபத்தில் பெண் பலி

கல்முனையிலுள்ள சவளக்கடைக் கிணற்றடிச் சந்தியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஏற்பட்ட வீதி விபத்தில் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து- மேலும் தெரியவருகையில், காலை வீட்டிலி ருந்து கல்முனைச் சந்தைக்கு கண வன், மனைவி இருவரும் துவிச்சக் கர வண்டியில் வந்த வேளை சவ ளக் கடை கிணற்றடிச்சந்தியில் வைத்து பின்னால் வந்த டிப்பர், இவர்கள் மீது மோதிய வேளை இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இவர் களைக் கல்முனை வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்ட பின்னர் சோதிமணி (வயது38) என்பவர் உயிரிழந்துள் ளார். இவரது கணவருக்கு காயங் கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.இவர்கள் மீது மோதிய வாகனமும் சாரதியும் தலைமறை வாகியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இ.த...

தற்போது பேச்சு வார்த்தையை மேற்கொள்வதற்கு எதுவும் இல்லை ஏனெனில் இறுதித் தீர்விற்காகவே பேச்சு வார்த்தை என்கிறார்கள். இதில் எமது நிலைப் பாடு தெளிவாக உண்டு அன்றும் எதிர்த்தோம், இன்றும் எதிர் க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (32)

## முல்லை...

சிறப்புரைகள், சங்கநாதம் பாட லும் ஆடலும், கடற்புலிமகளிர் அணியின் நாடகம், நாட்டிய நட னங்கள் என்பனவும் இடம்பெற வுள்ளது. எனவே அனைவரையும் அணிதிரண்டு வருமாறு நிகழ்ச்சி அமைப்பாளர்கள் வேண்டியுள் ளனர்.

# பொன்னம்பலம் மருத்துவமனையில் வைத்திய நிபுணரால் பற் சிகிச்சை

(கிளிநொச்சி)

வெளி நாட்டில் இருந்து நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினூடாக வருகை தந்திருக்கும் வைத்திய நிபுணர் சக்தி- கமலநாதன் அவர்களால் கிளிநொச்சி டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் விசேட பற் சிகிச்சை வழங்கப்படவுள்ளது.வரும் திங்கட்கிழமை, செவ் வாய்க்கிழமை இரு நாட்களிலும் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை இச் சிகிச்சை நடைபெறும் எனவும், பயன் பெறவிரும்பு வோர் கிளிநொச்சி டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் நேரில் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக் கப்படுகின்றது.

# வெடிபொருளுக்கு மின்சாரம் செலுத்தி பரீட்சித்த சிறுவன் படுகாயம்

துணுக்காய்ப் பிரதேசத்தில் உயிலங்குளம் பகுதியில் வெடிக் கும் பொருளை எடுத்து விளை யாடிய சிறுவன் அப்பொருள் வெடித்ததால் தலையில் காயங்க ளுக்கு உள்ளாகி மல்லாவி மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்றுக் காலை10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது இச்சிறுவன் ஒரு வெடிக்கும் பொருளை எடுத்து (டிக்னெற்றர்) அதை பற்றியுடன் இணைத்து பார்த்ததால் அதுவெடித் துள்ளது. உயிலங்குளத்தைச் சேர்ந்த சுதாரூபன் டிலக்சன் (வயது-5) என்ற சிறுவனே தலையில் காயங்களுக்கு உள்ளான நிலை யில் உடன் பெற்றோர்களால் மல் லாவி மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (24)

# கிளி.கந்தன்குளம் கிரவல் குழியினுள் முதியவரின் சடலம் கண்டெடுப்பு

கிளிநொச்சி கந்தன் குளத்திற்கருகில் முதியவர் ஒருவரின் சடலமொன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது: கடந்த 16ஆம் திகதி 12



மணியளவில் குளத்தில் குளிப்பதற்காகப் புறப்பட்டுவந்த இவர் வீடு திரும்பாததையடுத்து உறவினர் தேடியுள்ளனர். அத்தோடு காவல்துறையினரிடம் முறைப்பாடும் செய்துள்ளனர்.

பின்னர் நேற்றுக் காலை 9.00 மணியளவில் குளப்பகுதிக்குச் சென்ற அயலவர் இவரது உடல் கிரவல் வெட்டப்பட்ட குழி யொன்றினுள் கிடக்கக் கண்டனர். இது தொடர்பாக நீதியாளரின் விசாரணையின் பின் உறவினரிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. அந் தோனிப்பிள்ளை (வயது84) என்பவரின் சடலமே இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டது. மேற்படி நபருக்கு கண்பார்வை யற்றிருந்ததும் குறிப் பிடத்தக்கது. (லோ,ச,தீ)

# கிளி. உதயநகரில் குடும்பஸ்தர் தீ மூட்டித் தற்கொலை

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தீ வைத்து எரிந்து தற்கொலை செய் துள்ளார்.

நேற்று மாலை 5.30 மணிக்கு சிறிய காட்டுப்பகுதிக்குள் சென்று மண்ணெண்ணையை ஊற்றிக் கொண்டு தனக்குத் தானே தீமூட்டி எரித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது உடல் முழுமையாக எரிந்த நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரி யவருகையில் வீரமணி பெருமாள் (வயது 42) மேற்படி நபர் வவு னியா பூந்தோட்டத்தை நிரந்தர முக வரியாகக் கொண்டவர் எனவும் அண்மையில் கிளிநொச்சி உதய நகர்ப் பகுதியில் இடம்பெற்ற இவ ரது உறவினரின் திருமண நிகழ்வில கலந்து கொள்ள வந்ததாகவும் குடும்பத்தகராறு காரணமாகவே இவர் தற்கொலை செய்து கொண் டார் என்றும் தெரியவந்தது. சம்பவ இடத்திற்குச்சென்ற தமிழீழ காவல் துறையினரும் நீதியாளர் அறி வொளி அவர்களும் தடயங்களைப் பரிசோதித்ததோடு, நீதியாளரால் சம்பவம் தொடர்பான தெளிவான விசாரணையும் மேற்கொள் ளப்பட்டது. இதனையடுத்து உடல் கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரி சோதனையின் பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச)

## இந்திய....

கின்றன. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை நிறுவுவதில் ஏற்படும் தாமதம், கருணா விவகாரம், போன்றவற்றால் மீண்டும் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியாவை இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலை யிட வைக்கும் முயற்சியில் அரசு அதிக அக்கறை காட்டி வருவதாக அரசியல் அவதானிகள் தெரி விக்கின்றனர். இதேவேளை எதிர் வரும் 20 ஆம் திகதியன்று பாரா ளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு இலங்கை தொழி லாளர் காங்கிரஸை அரசாங்கத்தில் இணைப்பதற்கு இந்தியாவின் அழுத்தத்தை பயன்படுத்துவதும் மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தியாவின் அனுசரணையுட னேயே அரசாங்கத்துக்கு ஆதவர வளிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விரும்புவதன் அடிப் படையிலேயே அந்த விடயத்தை யும் பிரதமர் இந்திய அதிகாரி களிடம் முன்வைக்கவுள்ளார். (32)

## நாட்டப்பட்ட...

ஏற்பாடு செய்தவரும் அதற்குத் தகுதியற்றவர்கள்’ என எழுதப்பட்ட அட்டையொன்றும் இக்கல்லின் அருகே காணப்பட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது. (36)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.